தமிழன், வரலாற்றுச் சின்னங்களைக் காப்பதும்

எழுப்புவதும் அசைபோடும் காரியமல்ல!

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 20—8—1978 | இதழ் 50

(சென்னையில் 17-8-78 காலை தாடி ரத்தினம் இல்லத்தில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமண விழாவில் கழகத் தலைவர் கலைஞர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது! தமிழினப் பகைவர்கள் படித்துத் திருந்திட இதனை வெளியிடுகிறோம்)

"இப்படிப்பட்ட திருமண முறை பழங்காலத்தில் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டமுறை என்பதை சங்க இலக்கியங்களைப் படித்துப்பார்த்தால், ஒரு காதலனும் காதலியும் தோட்டத்தில் சந்தித்துத் தங்களுடைய மண வாழ்க்கையை அங்கே உறுதி செய்துகொண்டு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்புரிந்து கொள்ளலாம்.

இன்று சங்க இலக்கியங்களைப்பற்றிப் பேசினால், புலவர்களைப் பற்றிப் பேசினால், வரலாற்றுப் புகழ்மிக்க தமிழ் மன்னர்களைப் பற்றிப் பேசினால், நாட்டில் இருக்கிற சிலர் அதை ஏதோ பழமைக்கு நாம் பாடுகின்ற தாலாட்டு என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வள்ளுவர் கோட்டத்தைப் பார்த்து வயிறு எரிபவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். காவிரிப் பூம்பட்டினத்தில் கட்டப்பட்டிருக்கிற புதிய பூம்புகாரைப் பார்த்து எரிச்சல் கொள்பவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். சென்னைக்கடற்கரையோரத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்ற சிலைகளைப் பார்த்து இவைகள்தேவைதானா என்று கேட்கின்ற தமிழ் உணர்ச்சியற்றவர்கள் இன்றைக்கும் நாட்டில் இருக்கின்றனர்.

அவர்கள்என்னவாதங்களை எடுத்து வைத்து இவற்றை இகழ்கிறார்கள் தெரியுமா? அண்மையில்ஒரு வாரப்பத்திரிகை- அது தமிழ்நாட்டில், தங்களையும் தமிழர்கள்என்று சொல்லிக்கொள்கிறவர்களின் ஆதரவுடன் நடத்தப் படுகின்ற பத்திரிகை- அவர்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பியிருக்கிற சில தமிழர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் "வள்ளுவர் கோட்டம், பூம்புகார், கட்டபொம்மன்கோட்டை கடற்கரைச் சிலைகள் — இவைகள் எல்லாம் இன்னமும் தமிழன், பழமையை மென்று அசை போட்டுக் கொண்டிருக்கிறான் என்பதைக் காட்டும் அடையாளங்கள்" என்ற கருத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அவர்கள் நாடுகின்ற புதுமைக்கு நாம் எதிரிகள் அல்ல. இன்னும் சொல்லப்போனால் புதுமை வளரவேண்டும். மறுமலர்ச்சிக்கருத்துக்கள் உதயமாக வேண்டும் என்பதற்கு அடியெடுத்துக் கொடுத்த இயக்கமே நம்முடைய இயக்கம் தான் அதற்காக எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான நூல்களுக்குச் சொந்தக்காரர்களே நாம்தான்; அதற்காக மேடைதோறும், பேசிக்கொண்டிருப்பவர்களே நாம் தான்; ஆனால் அவர்கள் இன்றைக்கு நமது பழைய சிறப்புக்களை நினைவு கூர்வது தேவையாஎன்று கேட்கிறார்கள் அப்படிக் கேட்பவர்கள் அமெரிக்காவைத் திரும்பிப் பார்க்கட்டும். ரஷ்யாவைப் பார்க்கட்டும். மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் இன்றைக்கும் மாவீரன் லெனினுடைய உடலைப் பதப்படுத்தி வைத்து நாள்தோறும் அதை இலட்சக்கணக்கானவர்கள் வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களே, இவர்களின் வாதப்படி அது பழமை அல்லவா? அசைபோடும் காரியமல்லவா?

அமெரிக்காவிற்குச் சென்றால், வாஷிங்டன் பட்டினத்தில்கிட்டத்தட்ட பத்து அல்லது இருபது அடி உயரத்திற்கு மேற்பட்ட மண்டபத்தில் ஆஜானுபாகுவாக ஆப்ரஹாம் லிங்கன் அவர்களின் சிலை சலவைக் கற்களால் செதுக்கப்பட்டு வைக்கப் பட்டிருக்கிறதே அது பழமையை அசைபோடுகிற காரியமல்லவா, இவர்களது வாதப்படி?

அமெரிக்காவில் ஒரு மலை உச்சியில் லிங்கனின் முகத்தை, வாஷிங்டன் முகத்தைச் செதுக்கி வைத்திருக்கிறார்களே அது பழமைக்குத் துதி பாடுகின்றகாரியம் என்று இவர்கள் சொல்கிறார்களா?

சிங்கம் நடைபோடுகின்ற நேரத்தில் பின்னால் ஒருமுறை திரும்பிப்பார்த்துவிட்டு மறுபடியும் தன்னுடைய பயணத்தைத் தொடரும் என்று சொல்வார்கள். அதற்குப் பெயர்தான் அரிமா நோக்கு என்பதாகும்.

"திரும்பிப்பார், முன்னேறு" இதுதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமிழ்நாட்டு மக்களுக்கு விடுத்த கவிதை விடுதூது! திரும்பிப்பார், முன்னேறு என்று சொன்னார் திரும்பிப் பார்க்கிறோம். நம்முடைய இலக்கியங்களை நம்முடைய வரலாறுகளைத் திரும்பிப் பார்க்கிறோம், அவைகள் தருகின்ற உணர்வுப் பெருக்கால்தான் எழுச்சியால்தான், எதிர்கால வாழ்வு ஒளிமயமாக ஆகவேண்டுமென்று இன்று நாம் பாடுபட்டு வருகின்றோம். 1967 விருகம்பாக்கம் மாநாட்டில் தமிழ் மரபும், வர

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

நடிக முதல்வரின் இரட்டை வேடம்!

ஊழல் ஒழிப்பு எல்லோராலும் வரவேற்கத் தக்கது, ஆனால் ஊழல் ஒழிப்பு என்ற பெயரால் அரசியல் எதிரிகளை பழி தீர்க்கும் போக்கு ஏற்கப்பட முடியாதது மாத்திரம் அன்று; எதிர்க்கப்படவேண்டிய ஒன்றுமாகும்.

பொது வாழ்வில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் நியாயத்தையும் நேர்மையையும் கடைப் பிடிக்க வேண்டியது அவசியம். தம்முடைய வாழ்க்கையைத் திறந்த புத்தகமாகக் கொண்டு மாற்றாரும் போற்றிப் புகழத்தக்க முறையில் வாழ்வாங்கு வாழ்வதே லட்சிய வாழ்க்கையாக இருக்க முடியும்.

எனினும் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்போர் மீது பொறுப்பற்ற முறையில் பொய்யான குற்றச்சாட்டுகளைக்கூறி சேற்றை வாரி இறைப்பதையும் சகித்துக்கொள்ள வேண்டுமென்று யாரும் உபதேசம் செய்ய முடியாது. அத்தகைய போக்கிரிகளுக்குச் சரியான பாடம் கற்பித்து, சந்தியில் நிறுத்த வேண்டியதும் நம்மால் தவிர்க்க முடியாத ஜனநாயக கடமையாகும்.

தி. மு. க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அதன் சாதனைகளையும் நடைமுறைகளையும் தவிர்க்க முடியாதவர்கள் ஊழல் குற்றச்சாட்டு என்ற சூழ்ச்சி வலையைப் பின்னினர்கள். அதற்கு பினாமி பேர்வழிகளாக அன்றைய தினம் அகப்பட்டவர்கள்தாம் எம். ஜி. ஆரும் கல்யாணசுந்தரமும்.

கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் முறையான பதில்களும் விளக்கங்களும் சட்ட மன்றத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டன. அவை அனைத்தையும் தமிழ்நாடு சட்டமன்றம் அப்படியே ஏற்றுக் கொண்டது.

குற்றச்சாட்டைக் கொடுத்தவர்களில் ஒருவரான கல்யாணசுந்தரம் சட்டமன்ற உறுப்பினர் அல்லர். எம். ஜி. ராமச்சந்திரனே இருந்தும் இல்லாதவராக அன்றைக்கும் இருந்தார்.

★★★★★★★ ★★★★

க. சுப்பு
எம். எல். ஏ.

★★★ ★★★★★★★★

மன்றத்தில் எடுத்து வைக்கப்பட்ட விளக்கங்கள் மத்திய அரசை செயலிழக்கச் செய்தன. எனவே, நியாயத்தைப் புறக்கணிக்க முடியாமல் காலத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தார்கள்,

1973-ம் ஆண்டே பொது வாழ்வில் உள்ளோர் குற்றத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது கழக அரசு!

உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரை தலைமை நீதிபதியின் ஒப்புதலோடு விசாரணை ஆணையாளராக நியமிக்க அந்தச் சட்டம் வகை செய்தது; அதன்படி நீதிபதி வெங்கடாத்திரியைக் கமிஷனராகவும் நியமித்து பொது வாழ்வில் ஈடுபட்டிருப்போர் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை அந்த நீதிபதி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வழிவகையும் காணப்பட்டது. எனினும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த சிலர் இச்சட்டத்தை கடுமையாக எதிர்த்தனர். அதற்குக் காரணம் கெட்ட எண்ணத்தோடு பொய்யான புகாரை வேண்டுமென்றே கொடுத்தால் அப்படிப்பட்ட புகார் கொடுத்த நபருக்கும் தண்டனை கிடைக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டது.

தி. மு. க. அரசு சட்டவிரோதமாகக் கவிழ்க்கப்பட்டு சர்க்காரியா கமிஷனும் அமைக்கப்பட்டது. விசாரணை முழுதும் ஒருதலைப் பட்சமாகவே நடத்தப்பட்டது. அந்தச் சூழ்நிலையிலும் தான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த புகார்கள் மீது சாட்சி சொல்ல எம். ஜி. ஆர். மறுத்து விட்டார் புகாருக்குரிய பொறுப்பையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அவசர கால நிலையினையும் அரசு நிர்வாக இயந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தியும் — அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டும் புகார்கள் அனைத்திலும் உண்மை இருப்பதாக சர்க்காரியாவே கூற முடியவில்லை.

ஆதாரம் இருப்பதாகக் கருதப்படும் ஒரு சில வழக்குகளும் மேல் நடவடிக்கைக்காக எம். ஜி. ஆருக்கே அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன! நிச்சயமாக நீதிதேவன் மயங்கவில்லை!

ஒரு மாநில முதலமைச்சர் மீது கொடுக்கப்படும் புகார் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தலைமை அமைச்சருக்கு இருக்கிறது என்றால் தலைமை அமைச்சர் மீது கூறப்படும் புகார் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் யாருக்கு இருக்கிறது? அதற்கென்று ஒரு தனி அமைச்சர் உருவாக்குவது அவசியமல்லவா என்ற கேள்வியைப் பாராளுமன்றத்தில் அன்றைக்கே எழுப்பி வலியுறுத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்!

இன்று பிரதமர் மொரார்ஜி மீது அடுக்கடுக்கான ஊழல் குற்றச் சாட்டுகள் உள்துறை அமைச்சர் பொறுப்பில் இருந்தவரே விசாரணை கோரியிருக்கிறார் சொந்தக்காரர்களை கமிஷன் அமைத்து விசாரிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மாநிலங்களவையில் தீர்மானமே நிறைவேற்றப்பட்டு விட்டது!

"என் மகன் நிரபராதி; நானும் நிரபராதி" என்று வாதாடுகிறார் பிரதமர் அதை நிராகரித்துத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறது மாநிலங்கள் அவை!

ஊழலை ஒழிக்கவே உருவெடுத்ததாகக் கூறும் எம். ஜி. ஆர். கட்சி, தீர்மானத்தைக் கடுமையாக எதிர்க்கிறது; 'மொரார்ஜி லஞ்சம் வாங்கியவர்' என்று தேர்தலிலே முழங்கி — அவர் பிரதமர் ஆனதும் மன்னிப்புக் கேட்டு கடிதம் எழுதிய எம். ஜி. ஆர். இப்போது அவருக்கு வக்காலத்து வாங்கவே ஆரம்பித்து விட்டார்

அன்று அமைச்சர் சௌந்தரபாண்டியனைக் காப்பாற்ற ஊழல் தடுப்புச் சட்டத்தையே ரத்து செய்த எம். ஜி. ஆர். தான் இன்று விசாரணைக் கமிஷன் அமைக்கக் கோரும் தீர்மானத்தையே எதிர்க்கிறார்

கழகத்தவர் மீது விசாரணைக் கமிஷன் அமைக்கக் கோரி கவர்னரிடம் மனுக் கொடுத்த எம். ஜி. ஆர் தான் இன்று பாண்டிச்சேரியில் அமைச்சர் இராமச்சந்திரன் மீது கவர்னர் போட்ட விசாரணைக் கமிஷனை ரத்துசெய்யக் கோரி பிரதமர் மொரார்ஜியிடம் மண்டியிட்டுக் கிடக்கிறார்!

புகார்ப் பட்டியலில் இடம் பெற்ற ஒவ்வொருவரையும் தன் இதயப் பட்டியலில் இணைத்துக் கொண்டிருக்கும் எம். ஜி. ஆரின் இரட்டை வேடத்திற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு இருக்க முடியுமா?

மானமற்றவர்கள் விசிறட்டும்!

வடக்கேயுள்ள ஆட்சியாளர்கள் இந்தியை வேகவேகமாகத் திணிக்கிறார்கள்.

அப்படி இந்தி வேகமாகத் திணிக்கப்பட்டால், இந்திமொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இந்த நாட்டில் ஆளுபவர்களாகவும், அதிகாரிகளாகவும், வியாபாரிகளாகவும் ஆகிவிடுவார்கள்,

கண் இழந்துவிட்டால் மலருடைய அழகை எப்படிப் பார்க்க முடியாதோ, தொட்டுத் தாலி கட்டிய மனைவியையும் எப்படிப் பார்க்க முடியாதோ அதைப்போன்ற நிலைதான் நம் தாய் மொழியை இழப்பதால் ஏற்படும்!

இந்தி படித்தால்தான் உத்தியோகம்—இந்தி படித்தால்தான் உத்தியோக உயர்வு—இந்தி படித்தால்தான் வியாபாரம் — இந்தி படித்தால் தான் தேர்தலிலே இடம் என்று சொல்லுமளவுக்கு இன்றையதினம் வடக்கே உள்ள ஆட்சியாளர்கள் சொல்லத் துணிந்துவிட்டார்கள் இது போன்றே எல்லாத் துறைகளிலும் இந்தியை நம்மீது திணிக்கிறார்கள்

வழியிலே போய்க் கொண்டிருந்த ஒருவன் ஒரு வீட்டுத் திண்ணையிலே போய் உட்கார்ந்தான்; வீட்டுக்குரியவர் வெளியிலே வந்து 'என்ன?' என்று கேட்டதற்கு, அவன், 'மிகவும் களைப்பாக இருக்கிறது; குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்' என்றான் அவர் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். பிறகு அவர் உள்ளே சென்று சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது பக்கத்திலே போய் உட்கார்ந்து கொண்டான்; சாப்பாடும் போட்டார்கள். சாப்பிட்ட பிறகு 'களைப்பாக இருக்கிறது சிறிதுநேரம் படுக்க வேண்டும்' என்றான் அதற்கு அவர் படுக்கையும் போட்டார்.

'இதற்கு அடுத்த கட்டமாக இவன் நம்முடைய மனைவியை அனுப்பி விசிறச் சொல்லும்படிகூடக் கேட்பான் போலிருக்கிறதே' என்று அவர் நினைப்பதுபோலத்தான் இன்றைய நம்முடைய நிலையும் இருக்கிறது.

வடநாட்டுக்காரர்கள் நம்மை ஆளவந்தார்கள் — சரி என்று விட்டுக் கொடுத்தோம். வரி என்று கேட்டார்கள்; இல்லையென்னது கொடுத்தோம். ஆனால் இப்பொழுது தங்கள் இந்தி மொழியைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள்.

தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தவன் 'நம்முடைய மனைவியை அழைத்து விசிறச் சொல்லுவான் போலிருக்கிறதே' என்று வீட்டுக்குரியவர் எண்ணுவது போலத்தான் இப்போது வடக்கேயிருந்து இந்தி வந்திருப்பதைப்பற்றி எண்ண வேண்டியிருக்கிறது

மானமில்லாதவர்கள், சூடு, சொரணை இல்லாதவர்கள் விசிறக் கூடும்; மானமுள்ளவர்கள் — சூடு சொரணை உள்ளவர்கள் யாரும் விசிற மாட்டார்கள்.

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் நாகரிகம் ஆகியவைகளைக் கொண்டிருப்பதால்தான் நம்மைத் தமிழர்கள் என்று அழைக்கிறார்கள். ஏன் நம்மை மலையாளிகள் என்றோ, ஆந்திரர் என்றோ, கன்னடர்கள் அழைக்கவில்லை?

கழுத்திலே மாங்கல்யமும் நெற்றியிலே பொட்டும் இருப்பதுதான் கட்டுக் கழுத்திக்கு அடையாளம். அதைப் பார்த்து ஒருவன் நெற்றியிலே உள்ள பொட்டை அழித்துவிடு என்றால், அடப்பாவி, கல்போலக் கணவன் இருக்கையில் நெற்றியிலே இருக்கிற பொட்டை அழித்துவிடச் சொல்கிறாயே என்று கேட்க மாட்டாளா?

அதைப்போலவே நம்மீது இந்தியைக் கட்டாயமாகத் திணித்துத் தமிழை அழிக்கச் சொல்கிறார்கள்.

—பேரறிஞர் அண்ணா
(1960)

★ அதிரட்டும் முரசம் ஆர்க்கட்டும் சங்கம் ★

ஆகஸ்டு-15 விடுதலை நாள். அடிமைத் தளையை அறுத்தெறிந்த, அடிமை விலங்கை உடைத்து நொறுக்கிய நாள் ஆம் இந்தியத் திருநாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற அந்த நாளில் இந்தி ஆதிக்கத்திலிருந்து இந்திய தேசிய மொழிகள் விடுதலை பெறுவதற்கு மாநாடு நடத்தப் பெற்றது. தமிழ் காக்க, தமிழர் தம் நலம் காக்க தமிழ் நாட்டின் தலைநகரில், வாழ் நாள் முழுமையும் தமிழர் வாழ்வு பெற உழைத்த பெரியாரின் பெயரில் அமைந்த திடலில் இந்தி எதிர்ப்பு மாநாடு நல்ல நாளில் நல்ல இடத்தில் நடைபெற்றது.

மாநாட்டினை, தாய்க் கழகமாம் திராவிடர் கழகம் கூட்டியது. அதன் பொதுச் செயலாளர் வீரமணி அனைவரையும் வரவேற்றார். செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் தலைமை வகித்தார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் தொடங்கி வைத்தார்; பல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கட்சி சார்பற்ற தமிழறிஞர்களும் பங்கேற்றனர். உரையாற்றினர்.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதில்லை; மொழி விடுதலையும் நாட்டுவிடுதலையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதில்லை என்பதை நடுவணரசிற்கு எடுத்துக் காட்டிடும் வகையில் அனைத்திந்தியக் கட்சியின் தலைவர்களும் அதிலே கலந்து கொண்டார்கள். காங்கிரசின் சார்பில் அம்மையார் அனந்தநாயகி. சனதாவின் சார்பில் டாக்டர் சந்தோஷம், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் மாணிக்கம். இந்திய முஸ்லிம் லீக்கின் சார்பில் அப்துல் சமது, இந்திய பார்வர்டு கட்சியின் சார்பில் திருமறவன், காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் தலைவர் குமரி அனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். முத்தமிழ் வித்தகர்கள் பெருஞ்சித்திரனார், இராமநாதன் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ., தினகரன் பத்திரிகை ஆசிரியர் கந்தசாமி ஆகியோரும் பங்கேற்றனர்

பேசியவர்கள் அனைவரும் இந்தித் திணிப்பைக் கடுமையாகச் சாடினர். இந்தி ஆதிக்கத்தால் ஏற்படும் கேடுகளை விளக்கினர். இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட வேண்டும் என்றனர். போராட்டம் நடத்தப்பட்டால் ஒத்துழைக்க உறுதி அளித்தனர். ஆனால் அந்தப் புனிதப் போருக்குத் தலைமை ஏற்கத் தங்களால் இயலாது என்பதைச் சிலர் இலைமறை காயாய் வெளிப்படுத்தினர்; பேசியவர்களும் கூடியிருந்து கேட்டுக் கொண்டிருந்தவர்களும் அந்தத் தலைவனின் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த தமிழர்களின் பார்வை மேடையில் பதிந்திருந்தாலும் அவர்களின் கவனம் அந்தத் தமிழினத் தலைவனின் வரவு நோக்கி வாயிலிற் குவிந்திருந்தது.

இரவு மணி 7-45; அந்தத் தலைவனின் கார் மாநாட்டுத் திடலினுள் நுழைகிறது. வாயிலில் காத்திருந்த கருஞ்சட்டைப் படையினரும் பொது மக்களும் 'கலைஞர் வாழ்க' கன்னித் தமிழ்க் காவலர் கலைஞர் வாழ்க ''தமிழினத் தலைவர் கலைஞர் வாழ்க — என்று வாழ்த்தொலி முழங்கினர் கூட்டத்திலும் மேடையிலும் கூடி இருந்தவர்களிடம் மின்சாரம் பாய்ந்து பரவுவதைப் போல் உணர்ச்சி பாய்ந்து பரவியது.

அவர்களின் முகங்களில் பரவிடும் மகிழ்ச்சியும் கண்களில் மின்னிடும் ஒளியும் 'இதோ வந்து விட்டான் அப்புனிதப் போரின் தலைவன்' என்று இயம்புகின்றனர்.

மேடையிலேறி தன் இருக்கை நோக்கி இரு கரம் கூப்பிய வண்ணம் கலைஞர் வருகிறார். எழுந்த கரவொலியும் வாழ்த்தொலியும் அடங்கிடச் சிறிது நேரம் ஆகிறது.

உரையாற்றிய அனைவரும் விரைவு காட்டுகின்றனர். உரை கேட்கும் மக்கள் பரபரப்புக் காட்டுவதால் அனைவரும் அவசர அவசரமாகப் பேசி முடிக்கின்றனர். தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன, நன்றியுரை நிகழ்த்தப்படுகின்றது.

கல்லூரிப் பேராசிரியர் ஒருவர், அனைவரும் பேசிய பின்னரல்லவா நன்றியுரை நிகழ்த்த வேண்டும்; கலைஞர் பேசுவதற்கு முன்னர் நன்றி உரையாற்றுவது மரபுக்கு மாறானதல்லவா என்றார் என்னிடம். கலைஞர் பேசியதற்குப் பின் யார் இருப்பார் நன்றி உரையைக் கேட்பதற்கு என்கிறேன் நான். என்ன இருந்தாலும் மரபு பிறழலாமா என்கிறார் தணிந்த குரலில் அவர். மரபே நாமாக அவசியம் கருதி உருவாக்கிக் கொள்வதல்லவா என்கிறேன் நான்.

கலைஞர் பேசினார் — என்ன பேசினார், என்று குறிப்பிடுகிறேன். இல்லை இல்லை அவர் பேசவில்லை. போர்ப் பிரகடனம் செய்தார். இந்தி எதிர்ப்புப் போர்ப் பிரகடனம் செய்தார் மாற்றார் விடையிறுக்க முடியாத வினாத் தொகுப்பு; சரியான சரித்திரச் சுருக்கம். விஞ்ஞான ரீதியான வாதங்கள். விரிவான விளக்கங்கள்; அடுக்கடுக்கான ஆதாரங்கள்; அசைக்க முடியாத வரலாற்றுச் சான்றுகள் இவை அனைத்தும் அடங்கிய உணர்ச்சி ஓவியம் எழுச்சி ஓவியம் அவர் பேச்சு

மத்திய அரசினர் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று வாய்மொழியாய் உறுதி அளித்துக் கொண்டு செயல் வழியாய் இந்தியைத் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்தியில் யார் இருந்தாலும் நேருவானாலும் சாஸ்திரியானாலும், இந்திராவானாலும் மொரார்ஜியானாலும் இதுவே அவர்கள் நடைமுறைச் செயல் திட்டம். அதுவும் இப்போது மொரார்ஜி காலத்தில் இந்தித் திணிப்புத் தீவிரம் அடைகிறது—விரைவு பெறுகிறது—வேகம் கொள்கிறது: மறைமுகமாகக்கூட இல்லை வெளிப்படையாகவே இந்தி திணிக்கப்படுகிறது. இதுதான் அவர்களின் நிலை என்றால் இதுதான் அவர்களின் போக்கு என்றால் நம்முடைய நிலையும் போக்கும் நிச்சயம் மாறவே செய்யும் இதுவரை நாம் இந்தித் திணிப்பை எதிர்த்து வந்தோம்; இனிமேல் இந்தியையே எதிர்போம்; எதிர்த்துப் போராடுவோம் என்று முழங்கினார்.

மத்தியிலே இருப்பவர்கள் எல்லோரும் என்றில்லாவிட்டாலும் பலர்... இந்தியாவே இந்தியிலிருந்து வந்ததாகக் கருதுகிறார்கள் ஜெர்மன் மொழி பேசுவோர் வாழ்வதால் ஜெர்மனி நாடு என் என்றும், ரஷ்யமொழி பேசுவோரின் நாடு ரஷிய நாடு என்றும், ஆங்கில மொழியாளர் நாடு ஆங்கில நாடு என்றும் இருப்பதைப் போலத்தான் இந்தி மொழிக்காரர்களின் நாடு இந்தியா என்று கருதுகின்றனர். அப்படி இல்லை என்றாலும் அப்படி உருவாக்கிட வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. இன்னும் சிலர் இந்தியா ஹிந்துக்களின் நாடாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இந்தியா ஹிந்துயாவாக ஹிந்தியாவாக (India, Hiudu-a Hindi-a) ஆக்கப்பட வேண்டும என்று ஆசைப்படுகிறார்கள் அர்த்தமற்ற-ஆதாரமற்ற அந்த ஆசையை அவர்கள் நிறைவேற்ற நினைத்தால்-நிறைவேற்ற முயன்றால் விளைவு விபரீதமானதாக—வேதனை மிக்கதாக ஆகிவிடும். இந்தி இருக்கக் கூடும். ஆனால் அவர்கள் நினைக்கிற இந்தியா இருக்காது. நாடு துண்டு துண்டாகச் சிதறுண்டு போகும் இப்படிக் கடுமையாக அவர் எச்சரித்தார்.

மத்தியில் இருப்பவர்கள் இந்திய ஒருமைப்பாடு பட்டுப் போய் விடாமல் இருக்க, இந்திய ஒற்றுமை சிதைந்து போய் விடாமல் இருக்கவே இந்தியை ஆட்சி மொழியாக ஆக்குவதாகக் கூறுகிறார்கள். அதே காரணங்களுக்காகத்தான் இந்தியைத் திணிக்கக் கூடாதென்று அவர்கள் ஏவிய கணையை அவர்கள் மீதே திருப்பி ஏவி விட்டார்.

அந்த உண்மையைத் தெளிவுபடுத்த அண்மையில் அமெரிக்காவில் மொரார்ஜி சென்றிருந்த போது நிகழ்ந்த நிகழ்ச்சியை எடுத்துக் காட்டினார் இந்தியா ஒரே தேசிய இனத்தைக் கொண்ட நாடில்லை. பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு அமெரிக்காவிற்குச் சென்ற மொரார்ஜிக்கு குஜராத்தியர்கள் குஜராத்தி மண்டல் சார்பிலும் பஞ்சாபியர்கள் பஞ்சாபி சுபா சார்பிலும் மலையாளிகள் கேரள சமாஜம் சார்பிலும் தமிழர்கள் தமிழர் சங்க சார்பிலும் வரவேற்பு அளித்தனர். ஆம்! இந்தியர்கள் என்று யாரும் தனியாக வரவேற்பு அளிக்கவில்லை. அவர்கள் தனித்தனியாக அளித்த வரவேற்புகளின் ஒட்டு மொத்தமே இந்தியர்கள் அளித்த வரவேற்பாகும். இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டுமே தவிர ஒற்றுமையில் ஒருமைத்தன்மையைக் காண முனையக்கூடாது. Unity in Divrsily என்பதை மத்திய ஆட்சியினர்க்குத் தெளிவுபடுத்தினார்.

திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் மட்டுமே இந்தியை எதிர்த்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் இன்று அனைத்திந்திய கட்சிகளும் இந்தியை எதிர்க்கின்றன 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் 1000 பேர் சிறை சென்றனர் என்றால் இன்று அந்தப் போரில் சிறை செல்ல லட்சோப லட்சம் பேர் தயாராக இருக்கிறார்கள். அதன் அடையாளம்தான் இந்த மாநாடு. இதனை மத்திய ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

அவர்களுக்கு உணர்த்தும் வகையில் எதிர்வரும் செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் நாடெங்கிலும் இந்தி எதிர்ப்புக் கண்டனக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். அதற்குப் பின்னரும் ஆட்சியாளர்கள் உணரவில்லை என்றால்? என்ற வினாவை விடுத்து அந்த வினாவிற்கு விடை பகர்ந்தது இந்தி எதிர்ப்புப் போர்ப் பிரகடனம் செய்ததாகத் தான் இந்தி எதிர்ப்புப் போர்ப்படைக்கு ஆணை பிறப்பித்ததாகத்தான் அமைந்தது. இதற்குப் பிறகும் இந்தித் திணிப்பை மத்தியில் இருப்பவர்கள் நிறுத்திக் கொள்ளாவிட்டால் தமிழகம் முழுமையும் கடை அடைப்பு நடைபெறும். அதையும் மத்திய அரசு மதிக்காவிட்டால் மத்தியிலே இருந்து வருகின்ற அமைச்சர்களுக்கு தமிழர்கள் அமைதியாகக் கறுப்புக் கொடி காட்டுவார்கள் இப்படி அப்போர் பல்வேறு வடிவங்கள் பெறும். எப்படிப்பட்ட விளைவுகள் வரும என்பதை எண்ணிப் பார்த்தே வினை வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் ஆய்ந்தே அவர் அந்தப் போர்ப் பிரகடனம் செய்தார். அடக்குமுறைகளால் தமிழர்களின் மொழிப் போரை அடக்கிவிட நினைத்தால் அது எவ்வளவு அறியாமை நிறைந்தது என்பதைச் சுட்டிக் காட்டினார். இந்திராவே தோற்றுப் போன வரலாற்றை அவர்களுக்கு நினைவுபடுத்தினார்.

தலைவர் ஆணை பிறப்பித்து விட்டார். தமிழர்களே கிளர்ந்தெழுங்கள் தமிழினத்தின் தனிப் பெருந் தலைவர் கட்டளை பிறப்பித்து விட்டார். தமிழ் மறவர்களே அணி திரளுங்கள். அதிரட்டும் முரசு; ஆர்க்கட்டும் சங்கம் தொடங்கட்டும் போர்! போர் போர், இந்தி எதிர்ப்புப் போர்! இறுதி வெற்றி செந்தமிழர்களுக்கே. சிங்க ஏறுகளே சிலிர்த்தெழுங்கள்!

வேலையில்லை! வேலையில்லை! வேலை என்பது இல்லையடா!

தேசியக் கவிஞர் பாரதியார் பாடி வைத்த பாட்டினைப் பாடாத நா இல்லை — அன்று! நாட்டு விடுதலைக்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே பள்ளு பாடுவோமே

இந்த கீதத்தை இசைக்காத இல்லங்களிலில்லை. கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமொன்றை நடத்தி இந்திய நாட்டை அந்நியன் பிடியிலிருந்து மீட்டோம்.

1947–ஆம் ஆண்டு வரை அந்நியனான வெள்ளையன் நம் மீது ஆதிக்கம் புரிந்து வந்தான். கொழிக்கும் செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். அதற்கு முடிவு காண அடிமை விலங்கு அறுக்கப்பட்டது.

அந்த அந்நியனை ஆட்சியிலே இருந்து விரட்டிய நாள் ஆகஸ்டு 15.

இனி நாட்டில் வறுமை அகன்றிடும். வளமை கொழித்திடும்; வாழ்வு மலர்ந்திடும், இந்திய நாடு இப்புவியின்மீது ஈடில்லாத புகழினை ஈட்டிடும் என்றெல்லாம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவர்கள் புகழ்ப்பாட்டுப் பாடினார்கள். ஆம்' புறப்பாட்டுப் பாடினார்கள்.

டில்லிச் செங்கோட்டையிலே செங்கோல் செலுத்துகிறவர்கள் 'ஜனநாயகம்' நமது உயிர் மூச்சு, அது இலட்சியத்தை நிறைவேற்றும் அடித்தளம் சோசலிசம் நமது நாட்டை சொர்ணபுரி ஆக்கும் என்றெல்லாம் சங்கநாதம் புரிந்தார்கள்; இன்றும் புரிந்து வருகிறார்கள். அது ஆண்ட கட்சியானாலும் சரி அல்லது ஆளுகின்ற கட்சியானாலும் சரி சோசலிசப் பாட்டைப் பாடுவதிலே ராகம் மாறுவதில்லை. தாளமும் தப்புவதில்லை.

வறுமை ஒழிந்ததா? வாட்டம் போனதா? வாழ்வில் வளமை சேர்ந்ததா? முத்தனும் முனியனும் மூன்று வேளையும் உண்ண முடிகிறதா! ஏழைக் குடிமகன் குடியிருக்க குறைந்த அளவு சொந்தமாக குடிசையைப் பெற்றிருக்கின்றானா? முப்பதாண்டுகளுக்கு முன்பே இந்தியா விடுதலை பெற்றுவிட்டதே என்று எண்ணிக் கணக்குப் பார்க்கின்ற நாள்தானே 'சுதந்திர நாள்'

நாளொன்றுக்கு ஒரு நபரின் உழைப்பின் மதிப்பு ரூபாய் மூன்று என்று மதிப்பீடு செய்கிறார்கள். இந்தியா உள்ளபடியே ஓர் ஏழை நாடாகவே இன்றும் இருந்து வருகிறது.

இங்கே ஏற்றத் தாழ்வுகள் உச்ச நிலையில் இருக்கின்றன இன்றும்.

உழைக்கும் தொழிலாளி ஓடாகிறான் உழைப்பை உறிஞ்சுவோர் உப்பரிகையிலே உலா வருகிறார்கள். குறைந்தபட்சத் தேவையைக் கூட தொழிலாளர்களால் தேடிக் கொள்ள முடிவதில்லை, மக்களுடைய தேவைகளை அரசே ஏற்கும் போது இந்தக் குறைந்த அளவு வருமானத்தால் கூட மக்களின் துன்பத்தை துடைக்க முடியும். ஆனால் இன்றைய அரசு முறையோ அதிகச் செலவால் நடைபெறுகிறது. அதோடு மட்டுமின்றி வீணான விரயமும் செய்கின்றது.

நாட்டில் செல்வம் இருக்கிறது. அந்தச் செல்வத்தை நாமே வகைப்படுத்தி செயல்படுத்தினால் பட்டினியைப் போக்கிடலாம் ஏன் செயல்பட முடியவில்லை? உறிஞ்சும் வர்க்கத்துக்கு அடிமையாகவே ஆட்சியிலே அன்று இருந்தவர்களும் இன்று இருக்கின்றவர்களும் இருப்பதுதான் காரணமாகும்

முப்பதாண்டுக் காலம் ஒரு ஆட்சிக்கு போதாதா? நாட்டில் உள்ள வறுமையை ஓட்டவும், வளத்தைப் பெருக்கவும் இன்று வரை இந்நாடு கடைப்பிடித்து வந்த ஆட்சி முறையில் ஏதோ கோளாறு இருக்கிறது. நாட்டை எதிர்நோக்கியுள்ள எந்த அடிப்படையான பிரச்சினைகளையும் தீர்க்க முடியவில்லை. எந்தத் துறையிலும் சிக்கலே நிறைந்துள்ளது.

இந்த நாட்டில் முப்பதாண்டுக் காலத்தில் எது பெருகியுள்ளது? மக்கள் தொகை தானே பெருகியுள்ளது. அதற்கு இணை பாகமட்டுமல்ல பல மடங்கு வரி கூடப் பெருகியுள்ளது.

சா. கணேசன்

1947-ஆம் ஆண்டில் மத்திய ஆட்சி ரூபாய் ஐந்நூறு கோடி வரி போட்டது. இன்றோ அந்த வரி பன்னிரண்டு ஆயிரம் கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது அதுதான் மத்திய ஆட்சியின் இமயமலை போன்ற சாதனை வரிச் சுமையோ மக்கள் தாங்க முடியாத நிலை.

மலேரியா போன்ற நோய்க்கு மருத்துவ உதவியோ பாதிக்கப்பட்டோரை அடைவதும் அரிதாக உள்ளது. எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை இன்னும் வழங்க முடியவில்லை வானமே கூரையாக, தரையே படுக்கையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற ஏழைக் குடும்பங்கள் ஆயிரமாயிரமாக அலைகின்ற காட்சியை இன்னும் காணுகிறோம் பெரும்பான்மையான மக்கள் குழந்தைச் செல்வங்களை பள்ளிகளுக்கு அனுப்ப இயலாத நிலை

படித்து வருகின்ற உயர் கல்வியில் கூட தரத்திலேயும், அளவிலேயும் சிக்கல்; விவசாயிகளின் உழைப்பால் அளவு கடந்து பயிர்கள் அறுவடை செய்துங்கூட கிடங்கில் தேக்கி வைக்கப்பட்ட உணவுப் பண்டம் அழுகிப் போய்க் கொண்டிருக்கிறது.

அபரிமித அந்நியச் செலாவணியின் விளைவாகவும் நாட்டில் பணவீக்கம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது,

ஆண்டு ஒன்றுக்கு மத்திய அரசு பதினெட்டு ஆயிரம் கோடி ரூபாய் திட்டமிடாச் செலவென்றும் திட்டச் செலவென்றும் கொட்டிச் செலவழித்துக் கொண்டிருப்பது நெல்லுக்குப் பாய வேண்டிய நீர் புல்லுக்கும் பாய்வதுபோல் இருக்கிறது. விவசாயகளும் தொழிலாளிகளும் நடுத்தர மக்களும் நாளெல்லாம் பாடுபட்டு உழைத்து ஈட்டும் செல்வத்தில் இருந்துதான் வரியாகச் செலுத்துகிறார்கள்.

இன்றைய ஆட்சி முறையின் விளைவால் ஏழைகள் வியர்வையைச் சிந்தி உழைத்துத் தருகிற பணத்தை வரியாகப் பெற்று ஆடம்பரச் செலவைச் செய்யும் போக்கு இன்றும் நிலைத்து வருகிறது. குடியரசுத்தலைவரின் பரிவாரங்கள் ஆடம்பரச் செலவுகள் அனைத்துக்குமாக சேர்த்து நாள் ஒன்றுக்கு 17687 ரூபாய் விரயமாக்கப்படுகின்றது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆண்டொன்றுக்கு முந்நூறு ரூபாய் அடிப்படைச் செலவுக்குப் பயன் படுத்தினால்கூட பசியைப் போக்கமுடியும்; பட்டினியை விரட்ட முடியும்.

மத்திய அரசு ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்களை அள்ளிக் கொட்டியுங்கூட முப்பதாண்டுக் காலத்தில் நாட்டில் வேலையில்லாத பிரச்சினையைத் தீர்த்த பாடில்லை. வேலையில்லாதோர் பட்டியல் நாளும் நீண்டுகொண்டே, போகிறது இன்றுவரை இந்த நாட்டில் வேலையில்லாத இளைஞர்கள் ஒரு கோடிக்கு மேல் இருப்பதாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து செய்தி வெளி வருகிறது.

வேலை தேடி அலைவோரில் இலட்சக் கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளாதவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

வேலையில்லை! வேலையில்லை; வேலை என்பது இல்லையடா! என்ற இளைஞர்கள் வேதனைக் குரல் ஒலிக்காமல் இருந்திட இனிமேலாவது மத்திய அரசு திட்டங்களைத் தீட்ட வேண்டும். அந்தத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த வேண்டும். மாநில அரசுகளும் வேலையில்லாதோர் வேதனைக் கண்ணீரைத் துடைத்திடத் தனித் திட்டம் தீட்ட வேண்டும். மத்திய அரசும் அந்தத் திட்டத்திற்கு தாராளமாக நிதியைத் தருவதிலே முன் வர வேண்டும். இளைஞர்கள் இந்த நாட்டின் இதயங்கள். அந்த இதயங்கள் சீராகச் செயல்பட்டால்தான் நாடு செழிக்கும் இந்திய நாடு இந்த பூமியில் இறுமாந்து நிற்க முடியும்.

இந்த ஏற்ற — தாழ்வுக்கான காரணத்தைக் குடியரசுத் தலைவரே கூறுகிறார்;

"பெரிய தொழில் சாம்ராஜ்யங்களை வைத்துக் கொண்டு பெரும் பண பலத்தைப் பிரயோகித்து நாட்டின் சமூக பொருளாதார அடிப்படையே தகர்ப்பது மட்டுமல்லாமல் அதன் அரசியல் முறைக்கே பெரும் அபாயமாக விளங்கும் ஒரு சில குடும்பங்களின் ஆட்சி நாட்டில் இருந்து வருகிறது"; என்று விடுதலை நாளை ஒட்டி குடியரசுத் தலைவர் வானொலியில் நிகழ்த்திய உரையில் தனது வேதனையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"திட்டங்கள் தீட்டப்பட்டன. கொள்கைகள் முழங்கப்பட்டன; பல கோடி மக்கள் வாழும் இந்திய நாட்டில் நூற்றுக்கும் குறைவானவர்கள் கோடீஸ்வரர்களாகவும், கோடிக்கணக்கான ஏழைகள் தெருக் கோடியில் நிற்போராகவும் உள்ள நிலைதான் வளர்ந்தது இந்த முப்பது ஆண்டுகளில்!" என்று கழகத் தலைவர் கலைஞர் படம் பிடித்துக்காட்டி பரிகாரமும் கூறுகிறார்!

குறைகள் அனைத்தும் நீங்க — சுதந்திரத்தின் முழுப் பயனை, மக்கள் பெற்றிட — புதிய சிந்தனை தேவை! எல்லா அரசியல் கட்சிகளுக்குமே புதிய சிந்தனை தேவை!

நாடும் மொழியும் நமது மக்களும் மறுமலர்ச்சி பெற்றுத் திகழ — தலைகீழ் மாற்றங்கள் ஏற்படுத்த உண்மையான அரசியல்வாதிகள் முன் வர வேண்டுமென்று அறைகூவல் விடுக்கின்றார் கலைஞர்!

இவற்றை நாட்டு மக்கள் நெஞ்சிலே நிறுத்தி புதிய சிந்தனையோடு செயல்பட நாட்டின் தலைவர்கள் அழைக்கிறார்கள்.

★

புனிதராஜ்யம்..

(12-ம்பக்கத் தொடர்ச்சி)

நானா?...

நொண்டி : அதிருக்கட்டும். நீ யார்?...

எஸ் பி. : நானா? என் பெயர் சுந்தரம் எனக்குரிய அடைமொழியுடன் சொல்லட்டுமா? சுயமரியாதை சுந்தரம்

சூப்பிரண்டெண்டெண்ட் சுயமரியாதை சுந்தரம் என்று கேள்விப் பட்டிருப்பாயே; அந்த ஆள் நான் தான்!... சற்றுமுன் கேட்டாயே; அதிகாரம், அந்தஸ்து, பதவி, பணம் ஆகிய எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்படாதவன் எவனாவது இருக்கிறானா? என்று அலட்சியத்தோடு கேட்டாயே; அப்படி சுயமரியாதையோடு இருக்கிற உண்மையான மனிதர்களின் பட்டியலில் இடம் பெற்றவன்தான் இந்த சுந்தரம்!

நொண்டி : ஓ...சூப்பிரண்டு சாரா?... சார்! சார்! வாங்க நம்ப பங்களவுக்கு போகலாம்... பசியோடு இருப்பீங்க... இன்னைக்கு அருமையான மான் கறி!

சுந்தரம் : முதல்ல நீங்க போங்க...

நொண்டி: நீங்க பின்னால வர்ரீங்களா?... வீடு அட்ரஸ் தெரியுமா?...சொக்கி வா! போகலாம்!,..

சுந்தரம் உஸ்'...தொடாதே மரியாதையா போறீங்களா? இல்லே..-

(மிரட்டியவாறு கைத்துப்பாக்கியை நீட்டவே நொண்டியும் பொடியனும் அலறிக் கொண்டு ஓடுகிறார்கள்].

சுந்தரம் : (சொக்கியிடம் வந்து) ஏம்மா! கொலை செய்யப்பட்ட நல்லானுடைய பேத்தி தானே நீங்க?

(சொக்கி ஆம் என்று தலையசைக்கிறாள்)

சுந்தரம் : அதோ... ஜீப்... இருக்கிறது... என்னோடு கொஞ்சம் வரமுடியுமா'...

[சொக்கி, வருவதாக தலையசைக்கவே இருவரும் புறப்படுகிறார்கள். ஜீப் கிளம்பும் ஒலியுடன் காட்சி முடிகிறது. திரை விழுகிறது)

விரைவில் தொடங்குகிறது
'நம்நாடு' இதழில்
'ஊழ் வினை'
தென்னரசு எழுதும் மற்றொரு
உண்மைக் கதை

கவர்னரின் கனவு பலிக்குமா?

★★★★★-★★★★★★

ஜே எஸ். இராசு

பி. ஏ., பி. இடி.

★★★★★-★★★★★★

❀ தமிழக முதல்வர் எம் ஜி. ஆர் அழிவிலிருந்து மக்களைக் காப்பாற்ற மதுவிலக்கை அமுல் படுத்துகிறார்...

❀ தமிழ்நாட்டில் அதிக அளவில் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவதாகக் கூறப்படுகிற கருத்து தவறானது..

❀ மற்ற மாநிலங்களோடு ஒப்பு நோக்கும்போது தமிழகத்தில் கள்ளச் சாராயம் மிக மிகக் குறைவு..

❀ கள்ளச் சாராய வியாபாரத்தைத் தடுக்கக் காவல் துறைமூலம் தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது..

❀ தமிழ்நாட்டில் மது ஒழிப்பை நல்ல முறையில் நிறைவேற்றிக் காட்ட எம் ஜி. ஆர். உறுதி கொண்டுள்ளார்..

எம். ஜி. ஆருக்கும் தமிழக அரசுக்கும் மேற்கண்ட பாராட்டுரையை 'பட்...பட்' என்று வாரி வழங்கியிருக்கிறார்—தமிழக ஆளுநர் மேதகு பட்வாரியார் — தஞ்சைத் தரணியில் அண்மையில்!

தினமணி ஏடு ஆளுநரின் பாராட்டுரையைப் பெரிய அளவில் பிரசுரித்துப் பெருமிதம் கொண்டிருக்கிறது!

ஆளுநரையோ அவரது கருத்துக்களையோ எழும் என்றும் விவாதத்திற்குரிய பொருளாக ஆக்க விரும்புவதில்லை—மரபு காரணமாக எனினும்—

கடந்த ஓராண்டுக்கும் மேலான எம். ஜி இராமச்சந்திரன் ஆட்சியில் கள்ளச் சாராயம் கங்கை காவிரி போல் கரைபுரண்டு ஓடுகிறது என்ற இமயம் போன்ற உண்மையை மறைக்க முடியாதே!

ஏதோ மத்திய கால ஐரோப்பாவில் தனிக்கொடி தனிப்படையுடன் பிரபுக்கள் ஒருவரோடொருவர் போர் செய்து கொண்டதைப்போல் அல்லவா இருந்தது சமூக விரோதிகளான சாராய சாம்ராஜ்யவாதிகளின் சண்டை! வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது.. எங்கும் ஒரே புகை மண்டலம்... சாம்பல்மேடு.. கடைகள் சூறையாடப்பட்டன. கத்திக் குத்து.. கற்பழிப்பு.. கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடிப்பு.. சாலையெங்கும் சிதறிக் கிடந்த கற்களும் கண்ணாடித் துண்டுகளும்... போலீசாரே கலவரப் பகுதிக்குள் நுழைய முடியாத நிலை.. போலீசாரும் பொதுமக்களும் படுகாயத்திற்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதி... தீப்பந்தம் பெட்ரோல் மற்றும் பயங்கர ஆயுதங்களோடு கள்ளச் சாராய மன்னர்கள் வீதிகளில் வெற்றி வீரர்களாக உலா வந்த அவக் கேடு... சட்டம் ஒழுங்கை தங்களது கரங்களில் எடுத்துக் கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் அராஜகத்தையும் வன்முறையையும் நடத்தியகாட்சி — மேற்கு சென்னையை மட்டுமல்ல தமிழகத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டதே!

சான்றுக்குத்தான் சென்னைக் கலவரம். கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டுள்ள சமுதாய விரோதிகள் நாடெங்கிலும் இத்தகு கலவரங்களில் ஈடுபட்டுள்ளனர் — இன்றும் பிடிக்க வந்த போலீஸ் அதிகாரிகளையே கட்டி வைத்து உதைத்த காட்சியை நாடு மறந்துவிட்டதா! என்றாலும் மேதகு ஆளுநரோ மெத்தத் தெளிவோடு — சிறிதும் சந்தேகமின்றி புகழாரம் சூட்டுகிறார் — தமிழகத்தில் கள்ளச் சாராய ஒழிப்பில் எம்.ஜி ஆர் தீவிரமாக இருக்கிறார் — என்று

கள்ளச் சாராயம் கடல் போல் பெருகியுள்ளது என்று கழகத் தலைவர் கலைஞரோ—பொதுச்செயலாளர் பேராசிரியரோ கூறினால் காழ்ப்புணர்ச்சியால் எழுந்த குற்றச்சாட்டென சிலர் எண்ணவும் கூடும்—ஏன் 'கவர்னர் பெருமான் கூட அவ்வாறே கருதக் கூடும் — இன்றைய நிலையில்! ஆனால் கள்ளச் சாராய மகிமையைப் பற்றி நாடறிந்த பெரியவர்கள்- அரசியல் வாதிகள் — என்னென்ன கருத்துக்களைக் கூறி வருகிறார்கள் என்பது கூட — வரையறையின்றி பாராட்டு மொழிகளை வாரி வழங்கும் ஆளுநருக்குத் தெரியாதா?

எம். ஜி. ஆர். ஆட்சித் தந்து எதையுமே சாதிக்கவில்லை சென்னை உட்பட நாடெங்கும் தெருத்தெருவாகக் கள்ளச் சாராயந்தான் விற்கப்படுகிறது; ஆந்திர எல்லையிலிருந்து 600 அம்பாசிடர் கார்களில் பீர்" சென்னைக்கு வருகிறது; ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் மாதம் 15 ஆயிரம் ரூபாய் லஞ்சம் தரப்படுகிறது—என்கிறார் அனந்தநாயகி அம்மையார்

எம் ஜி ஆர் ஆட்சியில் கள்ளச் சாராயம் கரை புரண்டோடுகிறது ரோடுகளில் கார்களை விடுவதற்குப் பதிலாக—அந்த ரோடுகளில் ஓடும் கள்ளச் சாராயக் கடலில் கப்பலை விடலாம்போலிருக்கிறது—என்கிறார். தோழர் குமரி அனந்தன் எம் பி ஆளுநர் பட்வாரியும் சேர்ந்து உருவாக்கிய ஜனதா கட்சியின் சார்பில் வெற்றி பெற்றவர்தான் அனந்தன் என்பதை ஆளுநர் மறந்திருக்க நியாயமில்லை..

கள்ளச்சாராய வியாபாரிகள் நாடெங்கிலும் தாராளமாக நடமாடுகிறார்கள். கள்ளச்சாராயம் எங்கும் எப்போதும் ஏராளமாகவும் தாராளமாகவும் கிடைக்கிறது தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கையும் அழுலும் நகைப்புக் கிடமாகி விட்டிருக்கிறது—என்கிறார் மதிப்புக்குரிய கருப்பையா (மூப்பனார்...)

எடுத்துக் காட்டுகள் - இது போல் ஏராளமிருக்கின்றன எனினும் மணிக்கு மணி நாட்டின் நிலவரத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்பிருக்கும் நமது ஆளுநர் அவர்களோ — இந்த விமர்சனங்களைப்பற்றி யெல்லாம் கவலைப்படுவதாகவே தெரியவில்லை களிப்புடன் கதை அளக்கிறார்—மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் கள்ளச் சாராயம் குறைவு—என்று

போகட்டும் அனந்தநாயகியும் அனந்தனும் மூப்பனாரும் இன்று எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் சாமான்யர்கள். எனவே—அவர்களது குற்றச் சாட்டுகளையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்று மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி—ஒதுக்கி விடக் கூடும்!

இதோ! "எம். ஜி. ஆர் மதுவை ஒழிப்பேன் என்று மார்தட்டுகிறார்; ஆனால் சென்னை நகரில் தெருவுக்குத் தெரு கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. ஏன்...கவர்னர் மாளிகையின் வெளி வாசலிலேயே வைத்து கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது'...என்கிறார் மற்றொரு முக்கிய தலைவர்...முதிய தலைவரும் கூட! இவ்வளவு அழுத்தமாக-தைரியத்துடன் ஆனால் மனவேதனையோடு கள்ளச் சாராயம் விற்கும் இடத்தைக் கச்சிதமாகக் காட்டிடும் முதிய தலைவர் வேறு யாருமல்ல. ஆண்டு அனுபவித்த முன்னாள் முதல்வர் உயர்திரு பக்தவத்சலம் அவர்களேதான்! சென்னையில் வசிக்கும் பக்தவத்சலத்திற்குத் தெரிகின்ற உண்மை நமது ஆளுநருக்குத் தெரியாமலிருப்பது விந்தையேதான். ஒருவேளை—ஆளுநர் தனது மாளிகைக்கு உள்ளே நுழையும்போதும்— வெளியே வரும்போதும் மட்டும் கள்ளச்சாராய வியாபாரிகள் சற்றே தலை மறைவாகி விடுவார்கள் போலும்!

இன்று புகழ்பாடும் இதே ஆளுநர் அன்று கூறினர். "கள்ளச் சாராயம் காய்ச்சுவோருக்கு காவலர்கள் துணை போகிறார்கள்' என்று-

வேடிக்கையாகவும் இருக்கிறது—வேதனையாகவும் இருக்கிறது- நமது கவர்னரின் கருத்துக்களைப் படிக்கும் போது! கள்ளச்சாராயத்தை காவல் துறையினரைக்கொண்டே ஒழிப்பேன் என்கிறார்—ஒருநாள் மறுநாளோ-காவல் துறைக்குத் தெரிந்தே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது—என்கிறார்!

'முள்ளை முள்ளால் எடுப்பேன் என்றால் அது புத்திசாலித்தனம் ஆனால்—வறு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

என்ன விநோதம் பாரு'

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான 'ஜனசக்தி 6-7-78 இதழில்

மூன்றும் பக்கம்

புதுக்கல்லூரியில் நடப்பதென்ன? உடனே அரசு தலையிடவேண்டும் என்ற கட்டுரை.

ஆறாம் பக்கம்

மதுரைத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்கு ஆளுங்கட்சியான அ.இ.அ. தி. மு. க. வைப் பாராட்டி நகரக்குழுவின் அறிக்கை.

ஏழாம் பக்கம்

மதுரைத் தேர்தல் வெற்றிக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சி ராஜேஸ்வரராவ் 28-7-78 விடுத்த அறிக்கை-அ.இ. அ. தி. மு. க. வைப் பாராட்டி.

எட்டாம் பக்கம்

கோவையில் தமிழக முதல்வரின் விவசாயப் போராட்டப் பேச்சினைக் கண்டித்து கோவை மாவட்ட கம்யூனிஸ்ட் செயலாளர் எஸ். கண்ணனின் அறிக்கை.

மூன்றும் பக்கம் அரசுக்குக் கோரிக்கை; ஆறும் ஏழாம் பக்கம் ஆளுங் கட்சிக்குப் பாராட்டு; எட்டாம் பக்கம் ஆளுங் கட்சிக்கு எதிர்ப்பு'

—செங்கை தீவான்

நெஞ்சத் துடிப்பு

(கவியரசு முடியரசன்)

விரல்துடிப்பு யாழ்நரம்பில் இசையைக் கூட்டும்;
விறலியரின் கால்துடிப்பு நடனம் காட்டும்;
திறல்படைத்த சிற்பியின்கை உளித்துடிப்புத்
தேவரையும் கல்லுக்குள் அடக்கிக் காட்டும்;
அருள்பழுத்த கலைஞன்றன் மனத்துடிப்பால்
அருங்கலைகள் உருவாகும்; சிந்தித் தாயும்
திறல்படைத்த சிந்தனையார் மனத்துடிப்பால்
சீர்மைமிகு புத்துலகம் பூத்து நிற்கும்.

கற்பனையில் உலவுகவி மனத்துடிப்பால்
கனவுலகம் உருவாகும்; இல்லறத்தைக்
கற்றவர் காதலர்கள் மனத்துடிப்பால்
கருவுலகம் உருவாகும்; பள்ளி சென்று
கற்பவரின் அளவிலா மனத்துடிப்பால்
கலைகங்கள் உருவாகும்; ஒழுக்கக் குன்றில்
நிற்பவரின் மனத்துடிப்பால் நலங்கள் எல்லாம்
நிலசெங்கும் உருவாகும்; தீமை தேயும்.

துன்பத்தில் நெஞ்சங்கள் துடிப்ப துண்டு;
தொடர்கின்ற இன்பத்தும் துடிப்ப துண்டு;
துன்பத்தின் துடிப்பாலே புரட்சி தோன்றும்;
துடிக்கின்ற இன்பத்தில் மருட்சி தோன்றும்;
துன்புற்றுத் துடிக்கின்ற துடிப்பால் எங்கும்
தொடர்கின்ற புரட்சிநிலை தோன்றி நீளும்;
மின்பற்றி விளைபாடு வளரும் வேலும்
மிக்கூரும் ஆட்சிகளும் சரிந்து வீழும்.

தன்மனையின் காற்சிலம்பை விற்க வந்த
தனவணிகன் கோவலனைக் கள்வன் என்றான்;
பொன்செய்யுர் கொல்லனுரை நம்பி நின்றான்;
புகழ்கருணை மறவனுக்குத் தீங்கு செய்தான்;
பொன்செய்யும் வேலுடையான் பாண்டி மன்னன்
புகார்விட்டு வந்தான்மேல் புகாருரைத்தான்;
என்னுமொழி செவிப்படலும் கண்ணகித்தாய்
இருவிழியும் கனலாகக் கனன்றெழுந்தாள்

'குறையில்லாக் கோவலனோ கள்வன்? என்றன்
கொழுநனுக்கோ வீண்பழிகள்? சொல்வார்
பேச்சைச்

சரிஎன்று நம்புவதோ அரச நீதி?
சமன்செய்யும் கோல்போல நடுநின் றோராக்
குறைமதியன் நாடாளும் மன்னனோ?இக்
கொடுமைக்குச் சாவுமணி அடிப்பேன்' என்றே
எரிகின்ற நெஞ்சத்தே துடிதுடித்தாள்
இருந்தஇடம் தெரியாமல் சாய்ந்த தாட்சி.

சேராமல் தூற்றிவிடும் பழியை நம்பித்
தோழமைக்குத் தோள்தந்தான் என்று கூடப்
பாராமல் மேல்நிலையில் உள்ள மாந்தர்
பழிபுரிந்தால் நெஞ்சத்தில் துடிதுடிப்பு
வாராமல் போகாது; வரும்துடிப்பு
வாளாகும், வேலாகும் சாய்த்து வீழ்த்தும்
போராகும் எனுமுண்மை இன்றுங் கண்டோம்;
பொறுமை மனம் துடிதுடித்தால் புரட்சி
தோன்றும்.

தொடர் கதை

(3)

"ஏன் சித்ரா, அழுகிறாய்? அம்மா எங்கே?"

"அம்மாவா?"

"அம்மாவுக்கு என்ன...?"

"அம்மா?"

"அழாதே சித்ரா! விஷயத்தைச் சொல்?...அம்மா எங்கே போனார்கள்?"

"திரும்பி வராத இடத்துக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்!"

"ஆ!...இறந்து விட்டார்களா?"

"புரியும்படி சொல்—நானே குழப்பமாக இருக்கிறேன்—நீ அதை அதிகப் படுத்திவிடாதே!"

"நம்மிருவரின் காதலை அம்மா தெரிந்து கொண்டார்கள்"

"என் அப்பாவைப்போலக் கோபித்துக் கொண்டார்களா?"

"அப்படித்தான் எதிர்பார்த்தேன்...ஆனால் என் அம்மா, அவ்வளவு கோபமடையவில்லை. புத்தி சொன்னார்கள்; காதல் புனிதமானதுதான்—ஆனால் அதிலே வெற்றி பெறுவது கஷ்டம் சித்ரா! இந்தப் பாழும் உலகம் காதலுக்கு விதிக்கும் கட்டுப்பாடுகள் மிகப் பயங்கரமானவை— நாடகத்தில் காவியத்தில் காதலென்றால் நாட்டினர் தாம் வியந்து நன்றும் என்பர்—வீடகத்தே கிணற்றோரத்தே, ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்—பாடை கட்டி அதைக் கொல்ல வழி செய்கின்றார்"—என்ற பாரதியின் பாட்டைக் கேட்டும் திருந்தாத நாடு பெண்ணே இந்தக் கேடு கெட்ட நாடு! என்று அழாக் குறையாகச் சொன்னார்கள்"

"அய்யோ அவ்வளவு நல்லவர்களா உன் அம்மா!—உம்; பிறகு என்ன நடந்தது சித்ரா?"

"அம்மாவின் உபதேசம் தான்! கேளடி என் கண்ணே உலகம் மிகப் பொல்லாதது! அதன் கோரப் பற்களுக்கிடையே அகப்பட்டுப்போன காதலர் தொகை ஏராளம்! தினைப்புனத்து வள்ளிக் குறத்திக்கும், தேவலோகத்து முருகனுக்கும் கல்யாணம் செய்து அந்த திருவிழாவை நடத்தும் பக்தர்கள் தங்கள் வீட்டிலே அப்படி ஒரு காதல் திருமணம் நடக்க வொட்டாமல் நல்லபாம்பு போல் சீறுவார்கள்—கடவுள் காட்டிய பாதையையே அலட்சியம் செய்வார்கள், என்று கண்ணீர் சிந்தியபடி அம்மா பேசினார்கள்"

"உன் அம்மா இங்கிருந்தால் இப்போது ஒரு திருத்தம்கூட சொல்லுவேன்—தேவலோகத்து முருகன் என்றால் வெறும் பிரமச்சாரி முருகனல்ல, தெய்வயானையின் புருஷன்கூட! அவனுக்கு ஒரு குறப் பெண்ணை இரண்டாந்தாரமாக மணமுடித்து வைக்கும்—இந்த "சட்டம் மீறி கள்-காதலுக்குத்தடை போடுகிறார்கள் என்று!"

"அந்தத் திருத்தத்தை அம்மா ஏற்கமாட்டார்கள்—ஆண்டவனைக் குறைகூறல் அவர்களுக்குப் பிடிக்காது! அந்த நம்பிக்கையிலேதான் போலும் என் அம்மா—இப்படித் தன் வாழ்வைக் கெடுத்துக் கொண்டார்கள்!"

"எப்படிக் கெடுத்துக் கொண்டார்கள்—கொஞ்சம் விளக்கமாகச் சொல்லேன் சித்ரா!"

"எனக்கே தெரியாது! விளக்கமாகச் சொல்ல ஏதோ ஒரு பெரிய வேதனை என் அம்மாவின் உள்ளத்தை உருக்கியபடியிருந்தது என்பது மட்டும் எனக்குத் தெரியும்—நான் காணாமலிருக்கிற எத்தனையோ சமயங்களில் அவர்கள் அழுதிருக்கிறார்கள் என்பதை அவர்கள் கண்கள் சொல்லும்—தூங்குவது போல இரவில் நான் படுத்திருக்கும்போது அவர்கள் தேம்பி அழுவதை நான் கேட்டிருக்கிறேன்"

"ஏன் என்று நீ கேட்டதில்லையா?"

"கேட்டாலும் பதில் கிடைக்காது. ஆகவே அது வழக்கமாகிவிட்டது!"

"சரி—இன்றைக்கு என்ன நடந்தது; அதைச் சொல்லு கண்ணே!"

"அம்மா என்னைத் தேடிக் கொண்டிருக்கும்போது நான் அழுதபடி வீடுவந்து சேர்ந்தேன். ஏன் அழுது கொண்டு வந்தேன் என்றுதான் தெரியுமே; நாமிருவரும் இனி சேரமாட்டோம் என்ற பயங்கர நினைவு என்னை அப்படி அழவைத்துவிட்டது அம்மா கேட்டார்கள்—ஏன் அழுகிறாய் என்று நான் விஷயத்தை ஜாடையாகச் சொன்னேன்—அப்போதுதான் நான் இப்போது கூறிய உபதேசத்தை ஆரம்பித்தார்கள்—"

"சரி! நான் யாரென்று உன் அம்மாவிடம் சொன்னாயா?"

"அதைச் சொன்ன பிறகு தானே விபரீதப் புயல் வீச ஆரம்பித்தது!"

"ஏன்?—என்ன காரணம்? அழாமல் சொல்லு சித்ரா?"

"உன் காதலன் பெயர் என்ன என்று கேட்டார்கள்; செல்வம் என்றேன்—அம்மாவின் முகம் மாறிவிட்டது. கண்கள் கலங்கிவிட்டன—செல்வத்தின் அப்பா எப்படியிருந்தார் என்று கேட்டார்கள்; பார்ப்பதற்கு பயங்கரமான முகம், அம்மா என்று கூறினேன்—அவ்வளவுதான், அம்மாவின் நிலையை என்னால் வர்ணிக்கமுடியாது செல்வம்! தரையில் விழுந்து புரண்டு அழுதார்கள். நோயின் காரணமாக கட்டிலிலேயிருந்து எழுவதற்கும் இயலாத என் தாய் கட்டிலிலேயிருந்து தரையில் உருண்டதும் வீடு முழுதும் புரண்டதும் அய்யோ செல்வம்—என்னால் அதை நினைக்கவே முடியவில்லை! நான் அம்மா! என்று அவர்களைத் தடுத்துப் பார்த்தேன் கதறிப் பார்த்தேன். என்னால் அடக்க முடியவில்லை அவர்களை பிறகு அவர்களாகவே எழுந்தார்கள். ஏதோ ஒரு உறுதி போடு நின்றார்கள்—'இந்தா சித்ரா, இதை வைத்துக் கொள்'' என்று நான் இது வரையில் காணாமலிருந்த இந்த டைரியை என்னிடம் கொடுத்தார்கள்—கொடுத்துவிட்டு அருமைக் கண்ணே! என்னை மறந்துவிடு! என்னை இழந்துவிடு! என்று கூறியபடி என்னை முத்தமிட்டார்கள்.

டைரியைப் படி! அதன்படி நடந்துகொள்! என்று மீண்டும் என் கன்னத்தில் முத்தங்களைப் பொழிந்தார்கள். எனக்கு மயக்கம் வந்துவிட்டது. பிறகு என்ன நடந்தது என்றே தெரியாது—இப்போதுதான் கண் விழிக்கிறேன்—என் செல்வத்தைக் காணுகிறேன். என் அம்மாவை இழந்து விட்டேனா செல்வம் நான்? இனிமேல் அம்மாவைக் காணவே முடியாதா செல்வம்?"



சித்ரா செல்வத்தின் தோளிலே சாய்ந்தாள்—

"சரி—அந்த டைரி எங்கே?" என்று செல்வம் கேட்டான்.

"நான் அதைப் பிரிக்கவும் இல்லை—இதோ இருக்கிறது" என்று கட்டிலின்மீது கிடந்த டைரியை எடுத்து அவனிடம் கொடுத்தாள்!—அவன் டைரியைப் பிரித்து முதல் பக்கத்தைப் பார்த்தான்—"அய்யோ! மோசம் போய் விட்டோம் சித்ரா?" என்று கூச்சலிட்டான் செல்வம்.

"என்ன என்ன?" என்று அழுகையும், ஆவலும் ததும்பக் கேட்டபடி டைரியை வாங்கினாள் சித்ரா.

ஆம்; மோசம் போய்விட்டதாகவே அவளும் முடிவு கட்டினாள்—டைரியின் முதல் பக்கத்திலே ஒரு காதல் ஜோடியின் புகைப்படமிருந்தது. அதன் கீழே சந்தனம்-குமுதம் என்று கையெழுத்தும் போடப்பட்டிருந்தது! குமுதம் வேறு யாருமில்லை—தங்கம்மாள்தான் சித்ராவின் தாயார் தங்கம்மாள் தான்! சித்ராவின் தாயார் தங்கம்மாள்தான் அந்தக் குமுதம்!

குமுதம் யார்?—செல்வத்தின் தாயார்!

தங்கம் யார்?—குமுதமே தங்கம்!

சித்ரா யார்?—குமுதத்தின் மகள்!

"அய்யோ, சித்ரா! நாமிருவரும் சகோதரர்கள்!" என்று அலறிக் கொண்டே அந்த டைரியை வீசி எறிந்தான் செல்வம். தாயின் குளிரை அடக்குவதற்காகப் புகைந்துகொண்டிருந்த கணப்புச் சட்டியிலே அந்த டைரி விழுந்து எரியத் தொடங்கியது.

"சகோதரர்கள்—காதலர்கள்" அதனால்தான் அம்மா—ஓடிவிட்டாள் உயிரை விடுவதற்கு என்று புரிந்து கொண்டாள் சித்ரா!

இருளிலே ஓடிக்கொண்டிருந்த சந்தனத்தைப்பிடிக்க முடியாமல் திரும்பிய செல்வம், தன் காதலியாக இருந்த சித்ரா, தன் சொந்த சகோதரி என்பதை டைரியின் முதல் பக்கத்தைப் பார்த்ததும் உணர்ந்தான். உடனே இருவரும் நெஞ்சிலும் நெருப்பு கொட்டியதுபோலாயிற்று நிலைமை.

ஃ ஃ ஃ

ஆங்கே, செல்வத்தின் வார்த்தை கேட்டு உள்ளம் சிதறிப்போன சந்தனம், ஒரு மலைப்பாறையின் மீது வேகமாக ஏறிக்கொண்டிருந்தான் அந்த சாய்வான மலைப் பாறையின் உச்சியிலேயிருந்து, தன்னுடைய அலங்கோலமான உடலை சுக்கு நூறாக்கிக் கொள்ளலாம் என்ற முடிவோடு. மேல் நோக்கி—ந்தான் மண்ணின் அடித்தளத்தில் காலூன்றி, விண்ணின் விளிம்பைத் தொடுவதுபோல தன் உச்சியை நீட்டிக்கொண்டிருக்கும் அந்த சாய்வுப் பாதையிலே சந்தனம் சாவுப் பாதையை எண்ணி ஒரு விரக்தியான மகிழ்ச்சியோடு ஓடினான். உயர்ந்த பாதை—அதன் கீழே பயங்கரமான பள்ளம். அந்தப் பள்ளத்தில் முரட்டுத்தனமான அணைப்பிலே தன் உயிரைப் பிழிந்து கொடுத்து. சரீரத்தையும் சக்கை சக்கையாக்கிக்கொள்ளும் வெறியுடன் சந்தனம் ஏறினான்.

தற்கொலை செய்துகொள்வது தகாத பண்பு கோழைகள் செயல் என்றாலும்—சாவதற்கு ஒரு அசாதாரமான துணிவும் வேண்டும்; அந்தத் துணிவோடுதான் சந்தனம் ஆகாயத்தை நோக்கி நிற்கும் அந்த ஆபத்தான குன்றிலே—மேல் நோக்கி ஏறினான்; கீழ் நோக்கி விழுந்து சாவதற்காக.—அந்தப் பாறையின்

கருணாநிதி

உச்சியை அடைந்து விட்டான், அவனுக்கு முன்பாக அந்த உச்சியிலே நின்று கொண்டிருந்த ஒரு உருவம் அவன் கண்முன்னே தெரிந்தது. அவனது வேகம் தணிந்தது, அந்த உருவம், பாறையின் முகப்பில் இருந்தபடி கீழ் நோக்கியவாறு, தேம்பி அழுதது—கடைசியாக உரக்க ஒரு வார்த்தையை வெளியிட்டது! சந்தோஷமான சாவே! இதோ இந்த ஏழைக் குமுதாவை ஏற்றுக் கொள்!" அந்த வார்த்தையுடனே, இந்த உருவம், பாய்ந்திடத் தயாரானது. அதற்குள்—சந்தனம் அங்கே தாவிவிட்டான் தற்கொலை செய்து கொள்ள வந்தவன்... இன்னுமொரு உயிரைக் காப்பாற்றிடும் சூழ்நிலைக்கு ஆளாகி விட்டான்,

குமுதா! குமுதா; ஆம்—அவன் நெஞ்சத்துக் கோட்டையை இடித்து எறிந்து விட்ட பெயர்தான் அது! அவனது உள்ளத்துப் பூங்காவிலே நுழைந்துவிட்ட சூறுவளிதான் அது! அவனது இன்பகரமான வாழ்விலே விழுந்துவிட்ட இடிதான் அந்தப் பெயர்! ஆனாலும் அந்தக் குமுதா; உயிர்விடப் போவதை அவனால் தடுக்காமல் இருக்க முடியவில்லை. அதே நேரத்தில்—தன்னை யாரென்று அவளிடம் காட்டிக் கொள்ளாமலே- அவளது வாழ்வின் திருப்பங்களைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் ஆசை கொண்டான். மேல் அங்கியை எடுத்து நன்றாக முகத்தை மூடிக்கொண்டு. அவளோடு பேச ஆரம்பித்தான். அவளோ; நடுங்கியபடி நின்றாள். 'யார்?' என்று சந்தனம் கேட்பதற்குள்ளாகவே, அவள் கேட்டாள்; 'நீங்கள் யார்? என்னைத் தடுக்க?' என்ற கேள்வியை! -நானா? நானும் உன்னைப் போலத்தானம்மா தற்கொலை செய்து கொள்ள வந்தேன்—முதலில் உன் கதையைச் சொல்! பிறகு என் கதையைச்சொல்கிறேன். அதன் பின்னர் இருவருமே, சாவு உலகத்துக்கு பிரயாணத்தை ஆரம்பிப்பாம்!' என்று சந்தனம் கூறினான் குரலை மாற்றிக் கொண்டு பேசினான் என்றாலும், அவளது குரல்வளையை நெறித்து விடலாமா, என்ற கேள்வி எழும்புகிற அளவுக்கு அவன் கோபத் தீயில் நின்று கொண்டு தானிருந்தான்.

"என் பெயர் தங்கம்" என்று கதையை ஆரம்பித்தாள் அவள்.

"முன்னுரையே—பொய்யுரையாக இருக்கிறதே—உன் பெயர் குமுதம் அல்லவா?" என்றான் சந்தனம்.

"எப்படித் தெரியும் என் பெயர்?"

"இந்த ஏழைக் குமுதத்தை ஏற்றுக்கொள் என்று மரண தேவதைக்கு மடல் அனுப்பினாயே, அது என் காதிலே விழுந்தது."

குமுதம் சற்று திகைத்து நின்றாள். பிறகு. தாழ்வான குரலில், "என் கதையை நீங்கள் கேட்க வேண்டாம்—தயவு செய்து என்னைச்சாக விடுங்கள்' என்று அழுதாள்.

"நானும் சாகத்தானே வந்திருக்கிறேன்—உன் ரகசியக் கதையைக்கேட்டுக்கொண்டு போய்— நான் யாரிடம் சொல்லப் போகிறேன்? மேல் உலகத்தில் தான் சொல்ல வேண்டும்—மேல் உலகம் என்று ஒன்று இருந்து அங்கே போய் உன் கதையைச் சொன்னால் இதை விடப்பெரியகதை யெல்லாம் எம்மிடம் உண்டு, என்று மேனகையும்—திலோத்தமையும் ஊர்வசியும், ரம்பையும் ஓடிவருவார்கள்—ஆகையால் அங்கும் சொல்லமாட்டேன்; பயப்படாமல் உன் கதையைக் கூறு!'

"குமுதம் என்று தான் என்னை அழைப்பார்கள். ஆனால் நான் அமுதமாக இருந்தேன்; அவருக்கு!"

"யாருக்கு? இதோ பார் குமுதம்—இப்படி உட்கார்! உன் சோகச் சுமைகளை – புரியும்படி இறக்கு'—யாருக்கு நீ அமுதமாக இருந்தாய்?'

'அவருக்குத் தான்—என் அன்புருக்கு என் ஆருயிர் சந்தனத்துக்கு''

இதைச் சொல்லும்போது குமுதம் உடலெல்லாம் நடுங்கியது. இருதய பாரத்தைக் கீழே போட்டுவிட வேண்டும் கண்களிலே பெருக்கெடுக்கும் நீரிலே சோகப் பெருங்கற்கள் ஓரளவு கரைந்துவிட வேண்டும்—என்ற ஆசையோடு அவள் மேலும் பேசினாள்—சந்தனம். கூடியவரை தன்னை யாரென்று காட்டிக் கொள்ளாமலே அவள் பேசியதைக் கவனித்தான் ஆகாயத்திலே, நிலவு மேகத்திலே மறைவதும் வெளியே வந்து ஒளியைக் காட்டுவதுமாகத் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தது. சந்தனத்திற்கே, குமுதாவின் கதைச் சுருக்கம் கிடைத்துவிட்டது.

"சந்தனத்தைக் காதலித்தேன்! வீட்டிலே அப்பா எதிர்த்தார். இருவரும் காதலை வளர்க்க—வெளியூர் ஓடினோம். செல்வன் பிறந்தான். என் அண்ணன் மலேயாவிலிருந்து திரும்பினான். எங்களை வெறுப்போடு நோக்கினான். என் அருமைச் சந்தனத்தின் அழகு முகத்திலே திராவகத்தை ஊற்றி அலங்கோலமாக்கினான் என்னையும் ஒரு இரவிலே திருட்டுத்தனமாக கடத்திச் சென்று தனக்குள்ள செல்வாக்கின் காரணமாக பைத்தியக்கார விடுதியிலே சேர்த்துவிட்டான். பைத்தியங்களோடு வாழ்ந்தேன். நாலரை ஆண்டுக் காலம் அப்படி வாழ்ந்தேன். பின்னர் எனக்கு விடுதலை கிடைத்தது அந்த வேதனைபுரியிலிருந்து—அந்தப் பித்தர்களின் வேடிக்கை மண்டபத்திலிருந்து வெளிவந்தேன் வெளிவந்த மறுநாளே என் சந்தனத்தையும், செல்வத்தையும் காணவேண்டுமென்று அண்ணனிடம் அழுதேன். அவனும் என்னைப் போர்குமாறு விடையளித்தான். உங்கள் காதலின் தூய்மையை கருக்கிட இனியும் துணியேன் என்று வருத்தத்தோடு கூறி என்னை வழியனுப்பினான். வெளியூரிலேயிருந்த சந்தனத்தின் வீட்டுக்கு வரும் வழியிலே ஒரு சிற்றூர் அதன் பெயர் பூரித்தார் குடி அந்த பூரித்தார் குடி கிராமத்திலே ஒரு சாமியார் இருக்கிறார். மிகவும் பெரிய மகான் அவரிடமுள்ள ஒரு கோழியை ஒரு வெறிநாய் கடித்து, அந்தக் கடிபட்ட கோழி, சாமியாரைக் கொத்தியதால் அவர் இறந்து சமாதியாகிவிட்டார். அந்த சமாதியிலே தினந்தோறும் பேய் பிடித்த பெண்கள் ஆடுவார்கள். அவர்களின் நோய் நீங்கும், அந்த இடத்திலே நீயும் போய், கோழிக்கடி சாமியாரைக் கும்பிட்டு அருள் பெற்றுப்போ. என்று அண்ணன் சொல்லியனுப்பினான் அங்கே கோழிக்கடி சாமியாரின் சிஷ்யர் குஞ்சுக்கடி சாமியார் என்னைப்பற்றி விசாரித்தார். அந்தப் பெரிய மகானின் சிஷ்யர் எனக்கும் சந்தனத்துக்குமுள்ள காதலையும் அதில் குறுக்கிட்ட இடையூறுகளையும் நடந்தது நடந்தபடி சொன்னார். அதோடு, இனிமேல் நான் சந்தனத்தையோ அல்லது என் மகனையோ பார்க்கக் கூடாதென்றும்-என் ஜாதகப் பலன்படி அப்படிப் பார்ப்பதால் உடனடியாக அவர்கள் இறந்து விடுவார்கள் என்றும் சாமியார் கட்டளையிட்

என்ற திருப்தியால் வாழ்ந்தேன், என் பார்வைபட்டு அவர்கள் வாழ்வு பட்டுப் போகுமாம். அத்தனை துட்டலக்னமாம் நான் பிறந்த வேளை! யாராலும் பிரிக்க முடியாத எங்களை சாஸ்திரம் பிரித்து விட்டது- அந்தத் தடைமீறி போகலாமா? போனால் என் அன்புச் செல்வங்களின் உயிரல்லவா போய் விடும். ஆகவே என்னை ஒளித்துக்கொண்டு கிடந்தேன். திடீரென ஒருநாள், என் அண்ணனைக் கொலைசெய்து சந்தனம் சிறை புகுந்தார். ஆம், பழி தீர்த்துக் கொண்டார். என் அண்ணன் திருந்தி விட்டது அவருக்குத் தெரியாது—நானோ அனாதையானேன். தந்தையை முன்பே இழந்து தனயனை

டார் என் ஜாதகத்தால் தான் காதலனின் முகம், கருகி விட்டதென்றும் சாமியார் சொன்னார். என் கணவனும், மகனும் எந்த இடையூறுமின்றி சுகமாக வாழவேண்டுமானால் அவர்களுக்கும் எனக்கும் இனித் தொடர்பே இருக்கக்கூடாதென்று அவர் கூறிவிட்டார். சந்தனத்தின் வாழ்வும், செல்வனின் வாழ்வும் வளப்பட்டால் போதுமென எண்ணிய நான், என்னை அண்ணன் வீட்டிலேயே மறைத்துக் கொண்டு வாழ ஆரம்பித்தேன் காதலன் முகமும், செல்வன் முகமும் என் இருதயத்திலே பதிந்திருக்கும்போது வெளிப் பார்வைக்கு அவை ஏன்

யும் இழந்து தனித்த நான் தனயன் மனைவியையும் இழந்தேன். அவள் தனது குழந்தை சித்ராவை என்னிடம் ஒப்படைத்து மறைந்தாள், அந்தப் பர்மாக்கார் பெற்ற பைங்கொடி சித்ராவுடன் இந்தப் பக்கத்து ஊருக்கு; குடிவந்தேன்—சொந்த ஊரில் இருக்கப் பிடிக்காமல் நோய் என்னை வாட்டியது—ஆம் மனநோய்தான்—சித்ராவுக்கு ஒரு காதலன் கிடைத்துவிட்டான். யார் தெரியுமா அந்தக் காதலன்...என் ஆசைச் சந்தனத்தின் அன்புக்கனி அந்த செல்வனுக்கு என் அண்ணன் மகள் சித்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

கம்யூனிஸ்டுகளே-கண்துடைப்பு வேண்டாம்!

புதுக்குரலெழுப்பி போர்ப்பரணி பாடி புறப்பட்டுவிட்டதாக (மார்க்சிஸ்ட்) கம்யூனிஸ்ட்டுகள் அறித்துள்ளனர்.

வறுமையை நீக்கவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் மத்திய சர்க்காருக்கெதிராக குரலெழுப்பியுள்ளனர்.

"இங்கு உழைக்காதவன் ஆட்சிபுரிகிறான்:"

"சுரண்டல்காரன் கோலோச்சுகிறான்"

"பிறந்தவன் வாழ உரிமையில்லை இங்கே!"

இதுபோன்ற இருபொருள் பொதிந்துள்ள உரிமைக் குரலில் வலியுறுத்தியுள்ளனர்,

இது புதிய குரலுமல்ல புதிய போராட்டமுமல்ல!

தொழிலாளர் வர்க்கத்திற்கெதிரான சட்டத்தைத் தீட்டி உழைக்கும் மக்களின் உரிமைக்குரலை நெரிக்க நினைக்கும் இந்த ஆட்சிக்கெதிராகப் போராடத் தயங்குகிறவர்கள் ஏழை எளிய மக்களின்-தொழிலாளர் நலனின் — புறக்கணிப்பினை கண்டித்து குரல் கொடுத்து மத்திய அரசை மட்டிலும் தான் எதிர்த்துப்போராடப்போவது போல் அறிவித்துள்ளனர்!

விலைவாசி உயர்வுக்கும் வேலையில்லாப் பிரச்சினைக்கும் மத்திய அரசுதான் காரணம் என்றாலும் மாநில அரசுகளுக்கும் பொறுப்பில்லாமல் போய் விடவில்லை.

இருக்கின்ற வாய்ப்புகளைத் தட்டிக் கழிக்காமல் வேலை வாய்ப்புகளை வழங்கிடத் தயங்குகிற மாநில அரசையும் எதிர்த்துதான் போராட வேண்டுமென்கிறோம்.

இதையே மறைந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களும் கூறியிருந்தார்.

கம்யூனிஸ்டுத் தலைவரான இராமமூர்த்தி எம்.பி கூட மேடைகளில் முழங்கியிருக்கிறார்.

குடியேற்றம் சுப்பிரமணியம்

"இங்கு உழைக்காதவன் ஆட்சிபுரிகிறான்" என்று மட்டும் தான் தோழர்களால் கூற முடிந்ததே தவிர உழைக்காமல் ஊரை ஏமாற்றும் 'நடிப்பரசனின் முகமூடியைக் கிழித்தெறிய முடியவில்லையே?

தனக்கிருக்கும் வரி பாக்கியைக் கட்ட முடியாத நிலையில் ஆட்சிக்கு வந்த பின்னால் ஓராண்டில் பதின்மூன்று இலட்ச ரூபாய் வரி பாக்கி பைசல் ஆகிவிட்டது என்று அறிவிக்கிறார்கள்,

மக்களுக்குத் தெரியாமல் மாநில முதல்வர் எப்படி இந்தப் பணத்தைக் கட்டி விட்டார்? மக்களெல்லாம் தெரிந்து கொள்ளும் விதமாய் அறிவித்திட வற்புறுத்தி இருக்க வேண்டாமா?

போராடாமல் இந்த முதலாளித்துவ அமைப்பில் எதையும் சாதித்ததாக சரித்திரமில்லை என்று கூறிக்கொள்பவர்கள் "சுரண்டல்காரனே கோலோச்சுகிறான்" என்று இலை மறைவாகக் கூறி விட்டால் மட்டும் போதுமா?

கருப்புப் பணம் வாங்கிய பேர்வழியும் ஒரு வகையில் சுரண்டல் பேர்வழியே என்று சூளுரைத்திருக்க வேண்டாமா?

பிறந்தவனுக்கு வாழ உரிமையில்லாமல் செய்து விட்ட ஏகாதிபத்யவாதிகளுடன் தேர்தல் உறவு கொள்ளலாமா?

இன்றைய ஆட்சியில் கள்ளச் சாராயம் பெருகி நடுத்தெருச் சண்டைகள் நடந்து சட்டம் ஒழுங்கு குலைந்திருப்பதைக் கம்யூனிஸ்டுகள் அறியவில்லையா?

வீடுபுகுந்து ஏழை மக்களை வாட்டி வதைப்பதாக செய்தி வெளியானதே. பெண்களை எல்லாம் கூடத் துன்புறுத்தி அவமானப்படுத்தியதாக சின்னாட்களுக்கு முன்னால் திருமதி மைதிலி சிவராமன் அவர்கள் பத்திரிகைகளில் அறிக்கை விடுத்திருந்தாரே

இந்தக் கள்ளச் சாராய வியாபாரத்தில் லஞ்சமென்பதெல்லாம் மாமூலாகி ஊர் சிரிக்கும் அநியாயத்தை தோழர்கள் கண்டிக்க முன்வராதது ஏன்?

"போலீஸ் வேலைக்கு ஆள் சேர்க்கப்போகிறேன்" "பதினாயிரம் நியாயவிலைக் கடைகள் திறக்கப்போகிறோம்" என்லெல்லாம் முழக்கிய முதல்வரிடம் பேரணியாகச் சென்று வற்புறுத்தி இருந்தாலாவது ஓரளவு வேலையில்லாதவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியவர்களாவார்கள் என்று மக்கள் கணித்திருப்பார்கள். இல்லையென்றால் தொழிலாளர்களின் குரல் வளையை நெரிக்கும் அவசரச் சட்டத்தையியற்றிய அரசுக்கெதிராக கழகப் பேரணியினர் நடத்திய போராட்டங்களுக்கெதிராக மக்களை திசை திருப்ப கம்யூனிஸ்டுகள் நடத்திடும் கண்துடைப்புபோராட்டமென்றுதானே மக்கள் கருதுவார்கள்.

முதலில் முதலாளித்துவ அமைப்புடன் மாநிலத்தை ஆட்டிப்படைத்து வரும் அதிகாரவர்க்கத்திற்கெதிராக சுரண்டல் பேர்வழிகளை எதிர்த்து, சறுப்புப் பண முதலை உழைக்காமல் அரசோச்சும் தன்னலவாதிகளை எதிர்த்துப் போராட வேண்டாமா? உரிமைச்கு மத்திய அரசை எதிர்த்துக் குரல்கொடுக்க வேண்டியதுதான் அதே நேரம் மாநில அரசில் நடைபெறும் நியாய விரோதப் போக்கையும் தைரியமாகக் கண்டிக்க முன்வர வேண்டாமா?

புனிதரின் சட்டைப்பையில் நுழைந்துகொண்டுகுரலெழுப்பினால் யாரே நம்பிடுவார்?

தொடர் கதை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ராவைத் திருமணம் செய்து வைக்க நான் என்ன மறுக்கப் போகிறேன். ஆனால் அந்தக் காட்சியை நான் பார்க்கக் கூடாதே! என் மகனும், மருமகளும் காதலர்களாகி விட்டார்கள். நானே அவர்களை வாழ்த்த முடியாது. அன்றொருநாள் குஞ்சுக்கடி சாமியார் கூறிய வார்த்தைகள் எனக்கு அணை போட்டன. அதோடு என் சந்தனமும் சிறையிலேயிருந்து திரும்பி விட்டார். அவரையும் நான் பார்த்து விடக்கூடாது. ஆனால் எல்லோரையும் பார்க்கும் சந்தர்ப்பம் சித்ரா செல்வம். திருமணத்தால் ஏற்பட்டுவிடும்— ஆகவே என்னுடைய கதை முழுதும் குறிக்கப்பட்ட டைரியை சித்ராவிடம் கொடுத்து விட்டு, என் சந்தனத்தையும், செல்வத்தையும் காண முடியாத லோகத்திற்குச்சென்று விட முடிவு கட்டி இங்கு வந்தேன்."

என்று அழுது கொண்டே தன் கதையை முடித்தாள் குமுதம்

குளமாகியிருக்கும், தன் விழிகளைக் காட்டிக் கொள்ளாமலே சந்தனம் அவளிடம் கேட்டான்

"அந்தச் சாமியார் என்ன சொன்னார்; சந்தனத்தை நீ பார்த்தால் உடனே அவன் செத்து விடுவானா? அப்படித் தானே சொன்னார்?"

"ஆமாம்—அப்படித்தான்' சொன்னார்...அந்த மகான்!

"மகான்! அவன் ஒரு மலைப் பாம்பு! இதோபார் குமுதம் உன் சந்தனத்தின் முகத்தை—சந்தனம் சாகின்றானா பார்!" என்று முக்காட்டை விலக்கினான். சந்தனம்.

குமுதத்திற்கு எதுவுமே புரியவில்லை. "ஆ!" என்று அலறியபடி அவனை அணைத்துக் கொண்டாள் அவனது அலங்கோலமான முகத்திலே மாறி மாறி முத்தமிட்டாள்.

"குமுதம்—என்னை மன்னித்துவிடு தவறான எண்ணத்தால்— நான் காதலைப் பற்றியே ஒரு தவறான முடிவுக்கு வந்துவிட்டேன்- அந்த சாமியாரை விட்டு உன்னை ஏமாற்றியிருக்கிறான், உன் அண்ணன் — நீயும் ஏமாந்து விட்டாய்—இதோ பார்! சாமியார் சொன்னது உண்மையானால் இப்போது நான் செத்திருக்க வேண்டுமே: மாறாக, சாகப்போன என்னை யல்லவா— உன் சுந்தரமுகம் காப்பாற்றியிருக்கிறது!" என்று கூறியபடி அவளை, அவனும் ஆரத்தழுவிக் கொண்டான்

அண்ணனின் சூழ்ச்சியால், ஏற்பட்ட விபரீதத்தை எண்ணிக் குமுதம் கண்ணீர் வடித்தாள் உடனே இருவரும், சித்ராவையும் செல்வத்தையும் பார்த்திட ஓடினார்கள். ஓடும்போதே சந்தனம் கூறினான்—"காதல் ஒரு தொடர் கதை— அதிலே சங்கடம் அனுபவிப்பவர்களும், சஞ்சலம் கொண்டவர்களும், சந்தேகம் பிடித்தவர்களும், சாவுக்குத் துணிந்தவர்களும் கதாபாத்திரங்களாக இருக்கிறார்கள் இத்தகைய கதாபாத்திரங்களை ரோமியோ ஜூலியட்டிலே—லைலா மஜ்னுவிலே கிளியோபாட்ரா காதலிலே—ஒத்தல்லோ கதையிலே மும்தாஜ் காவியத்திலே அம்பிகாபதி ஒவியத்திலே பில் கணனிலே இன்னும் பிறவற்றிலே காணுகிறோம். அந்தச் சிறு கதைகள் முடிந்து விடலாம், ஆனால் காதல் என்னும் தொடர் கதை உலகம் உள்ள வரை முடியவே முடியாது. இன்ப முடிவுகளும், சோக முடிவுகளும் பின்னிப் பின்னி வரும் காதல் ஒரு பெரிய தொடர்கதை தான்'

இந்த உண்மையை ஏதோ புதிதாகக் கண்டுபிடித்துவிட்டது போல அவன் குமுதாவின் குளிர்க்கன்னங்களில் முத்தமிட்டான். அப்பா! எத்தனை ஆண்டுகளாகிறது; அவளது கன்னம்—காதலனின் சுர உதடுகளால் ஸ்பரிசிக்கப் பட்டு!

இருவரும் வீடு நோக்கி ஓடினார்கள் 'சித்ரா சித்ரா!' என அழைத்தபடி உள்ளே ஓடிய குமுதம்—"அய்யோ என அலறினாள். சித்ராவும், செல்வனும். தூக்கு மாட்டிக் கொண்டு பிணங்களாகத் தொங்கினார்கள்

"தவறு செய்து விட்ட சகோதரர்களை—உலகமே! மன்னித்து விடு!" என்று சுவரிலே கரியால் எழுதப் பட்டிருந்தது

குமுதம் கதறினாள் சந்தனம சுவரிலே முட்டிக் கொண்டான் என்ன செய்தால் என்ன; சருகிவிட்ட மொட்டுக்கள் மலரவா போகின்றன "நீங்கள் சகோதரர்கள் இல்லை' இல்லை!" என்று குமுதம் அலறினாள். அவளது டைரியோ நெருப்பிலே எரிந்து கிடந்தது "அய்யோ—இதை முழுதும் படிக்கவில்லை போலும்— அதனாலேயே என் தங்கங்கள் தங்களைத் தவறாகப் புரிந்து கொண்டன என்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள் குமுதா! "காதலர்கள் அவசரக்காரர்கள்" என்ற ஒலி சந்தனத்தின் இருதயத்திலே எழுந்தது.

இளம் தளிர்கள் இரண்டும் தங்களுக்கு மூத்தவர்கள் செய்த மூடத்தனத்திற்கு இரையாகி— பிணங்களாகத் தொங்கிக்கொண்டே

"காதலோர் தொடர் கதையே என்ற பாட்டைப் பாடாமல் பாடிக் கொண்டிருந்தார்கள்

முற்றும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மையை வறுமையால் ஒழிப்பேன்— பொய்யை பொய்யாலேயே அழிப்பேன்... திருடனைக் கொண்டே திருடனைத் தீர்த்துக் கட்டுவேன் என்று பேசுவது... பட்வாரி போன்ற மேதைகளுக்கு அழகல்ல

இருப்பினும் — வாதத்திற்காக — இதே போலீஸ் துறையைக் கொண்டு கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும் என்ற கவர்னரின் தற்போதைய கருத்தை ஒப்புக்கொள்ளலாம்! ஆனால் கவர்னரின் இந்த நம்பிக்கை நிறைவேற முடியாத அளவுக்கு ஒரு பெரிய பள்ளம்—நீண்ட இடைவெளி இருப்பதாக மற்றொரு மாமேதை குறிப்பிட்டுக் காட்டுகிறார் — 'போலீசார் மனது வைத்தால் கள்ளச் சாராயத்தை ஒழித்துவிடலாமென்று

இப்படிச் சொன்ன மாமேதை மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆரேதான்,

கள்ளச் சாராயம் போலீஸ் இலாகாவினருக்குத் தெரிந்தே காய்ச்சப்படுகிறது என்பதும்— ஆனாலும் அவர்களைக் கொண்டே அதை ஒழித்துக் கட்ட முடியும் என்பதும் கவர்னர் வளர்த்துக்கொண்ட புதிய நம்பிக்கை!

கவர்னரின் இந்த நல்ல கனவு நிறைவேற வேண்டுமானால் — கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் போலீசார் முழு மனதுடன்-உள்ள உறுதியோடு முயற்சிக்க வேண்டும்.

காவல் துறையினருக்கு அத்தகைய ஓர் உறுதி இருந்தால் மட்டுமே கள்ளச் சாராயமும் ஒழியும் — கவர்னரின் கனவும் நிறைவேறும்!

ஆனால் தேவைப்படும் அந்த மனவுறுதிதான் போலீசாரிடம் இல்லை — என்கிறார் முதலமைச்சர் எம். ஜி. ஆர். ஆக—கவர்னரின் முன்னுக்குப் பின் முரணான பேச்சுக்களும் போலீசார் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் முதல்வரின் கண்டுபிடிப்பும்— ஒரே நேரத்தில் கை கோர்த்து உலாவுகின்றன.

ஒரு கேள்வி கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குப் போலீசார் மன வைக்கவில்லை என்கிறாரே எம். ஜி. ஆர். அது யார் குற்றம்? மனது வைக்கும்படி — மனமாற்றம் ஏற்டும் படி செயல்படவைக்கும் வாய்ப்பும் அதிகாரமும் பெற்றிருப்பவர் போலீஸ் முதல்வர் எம் ஜி ஆர் தானே பின் ஏன் அந்த மன மாற்றத்திற்கான பக்குவத்தை ஏற்படுத்தவில்லை? முயற்சிக்கவில்லையா? அல்லது முடியவில்லையா?

தமிழினம் கொண்டாடவிருக்கும்

தனித் திருவிழா!

பகுத்தறிவுப் பாவலர்களாலும் கருத்து வானக் கனித் தமிழ்க் கவிஞர்களாலும் — புகழ்பூத்த புலவர்களாலும் போற்றிப் பாராட்டப் பெறும் அறிவுலகப் பெருஞாயிறு தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதில் நமக்குத்தான் எத்தனைப் பெருமை—பூரிப்பு — பெருமிதம்!

புன்னகை பூத்த முகத்தினராய்—பூரிப்பு பொங்கிடும் அகத்தினராய்—கொண்டாடி களித்திட நாம் — துடிக்கிறோமே இதற்குக் காரணமென்ன

எங்கள் தலைமுறையைத் தலையெடுக்க வைத்த தலைஞாயிறு! தலைத் தமிழர் அண்ணாவுக்கும் தலைவனாகக் கிடைத்த ஒரே தலைமகன் அண்ணா அவர்களாலேயே.

"பெரியாருடைய பெரும் பணி ஒரு தனி மனிதனின் வரலாறு அல்ல; ஒரு சகாப்தம்! ஒரு கால கட்டம்! ஒரு திருப்பம்! பெரியார் அவர்கள் அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும் எத்தனை பக்க பலத்துடன் வந்திடினும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை

தந்தை பெரியார் கண்ட களம்பல—கண்ட வெற்றிகள் பலப்பல! நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர்; பெரியார் ஒருவர்தான்' என பாராட்டிப் பொன்மாலை சூட்டப் பெற்றவர்!

அப்படிப்பட்ட பெரியாருக்கு—நம் தந்தைக்கு நூற்றாண்டு விழா என்றால் நெஞ்சம் களிக்கக் களிக்க கொண்டாடாமல் இருப்போமா?

கொண்டாட்டம் போட்டு மட்டும் நாம் நமது குறிக்கோளை அடைந்துவிட முடியாது — ஏனென்றால் குறிக்கோளுக்காக வாழ்ந்த தலைவர் அவர்—குருட்டு எண்ணங்களை விரட்டுவதற்காக குன்றென எழுந்து போராடியவர் அவர் புரட்டர்களைப் புரட்டி அடிப்பதற்குப்பொழுதெல்லாம் புரட்சிக் கனல் ஏந்திய பெருமகன் அவர். எனவே அவரது நூற்றாண்டு விழாவை கருத்து விளக்க விழாவாக — கண் திறப்பு விழாவாக — மறுமலர்ச்சிப் பெரு விழாவாக — மனமாற்றத் திருவிழாவாகக் கொண்டாடுவதே அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும், அவர் வழி நாம் நடக்கின்றோம் என்பதற்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக இவ்விழா விளங்கும்!

நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளையும்—அந்த ஓராண்டுக் காலம் முழுமையும் நடைமுறைப்படுத்த இருக்கும் திட்டங்களையும் — அறப் போராட்ட முறைகளையும் திராவிடர்கழகத்தின் பொதுச் செயலாளர் 'விடுதலை' ஆசிரியர் வழக்கறிஞர் கி. வீரமணி விளக்கினார்.

"நூற்றாண்டு விழா செப்டம்பர் 16,17 18 ஆகிய நாட்களில் சென்னையில் மிகுந்த எழுச்சியான முறையில் கொண்டாடப்பட இருக்கிறது. அதுபோது சுயமரியாதை இயக்கக் கருத்துக்களையும் — பெரியாரின் சிந்தனைகளையும்—வெளிப்படுத்தும் கருத்தரங்கம்—பட்டிமன்றம்— கலைநிகழ்ச்சிகள் — பாட்டரங்கங்கள் நடைபெறும்.

> "சாய்த்திட வந்த சமூகத் தீமையை
> மாய்த்திட வந்த மனித பூகம்பம்
> நத்தைகள் எழுந்து நடக்க வைத்தவன்
> புத்துலகச் சித்திரம் படைத்த ஓவியன்" என்றும்—
> "ஈரோடு கண்ட எந்தை பெரியார்
> சமூக வாழ்வின் சட்டப் புத்தகம்
> பதவிக்காகப் பாதை தவறியுரிம்
> அரசியல் உலகை அணுகாச் சான்றோன்" எனவும்—

விழாவில் பங்கேற்குமாறு முதுபெரும் தலைவர்களுக்கும்—மத்திய அமைச்சர்களுக்கும்-பிறமாநில நுண்மாண் நுழைபுலம் மிக்க நுண்ணறிவாளர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளன

விழாநிகழ்ச்சிகள் சென்னையில் மட்டும் நடந்தாலும் நாடு முழுமைக்கு நிகழ்ச்சிகள் தெரிந்திடுவதற்கும் வகை செய்ய வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

ஆம்!

தொலைக்காட்சி மூலம் நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்பிடவும்—

வானொலி மூலம் நிகழ்ச்சிகளை உரைகளை ஒலிபரப்பிடவும் ஏற்பாடு செய்யவேண்டுமென மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் எல். கே. அத்வாணி கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து மக்கள் விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்க வசதி செய்து தரும் பொருட்டு ஆங்காங்கிருந்து தனி இரயில்கள் விடப்பட வேண்டும் என்ற கோரிக்கை மத்திய இரயில்வேத்துறை அமைச்சர் மதுதந்தவதே அவர்களுக்கு விடப்பட்டுள்ளது.

தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் அரிய கண்காட்சி செப்டம்பர் 17-ம் நாள் துவங்க இருக்கிறது பெரியார் திடலிலேயே; ஒரு வார காலம் அங்கே இருக்கும் அந்தக் கண்காட்சி—நடமாடும் கண்காட்சியாக உருமாற்றம் செய்யப்பட்டு தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் கொண்டு செல்லப்பட்டு மக்களுக்குக் காட்டப்படும் — சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துரைப்பதன் மூலம் அவர்தம் அறியாமை ஓட்டப்படும்!

நகர்ப்புறங்களிலே மட்டும் இதுவரை நடைபெற்று வந்த பகுத்தறிவுப் பிரச்சாரம் திட்டமிட்டவகையில் நூற்றாண்டு விழா நாட்களில் சிற்றூர் தோறும் நடைபெறும்!

அதே நாளில் — அறிவுலக ஞாயிறு உதித்த நாளில் கருஞ்சட்டைப் படையினர் (ஆடவரும் பெண்டிரும் பங்கேற்கும்) மாபெரும் பேரணி நடைபெறுகிறது.

மணிமொழி

பேரணியில் இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் நிச்சயம் கலந்துகொள்வார்கள் என்று வீரமணி குறிப்பிட்டார்.

ஓராண்டுக்கால உன்னதப் பணிகளில் சாதிப் பெயர் அழிப்புப் பணியும் இருக்கும்—

1957-ல் 'பிராமணாள் ஓட்டல்' என்பதை அழிக்கும் போராட்டம் நடந்தது. அதற்குப் பின்னால் பெருமளவுக்கு அப்படிப்பட்ட பெயர்ப் பலகை இல்லாமல் இருந்தது நெருக்கடி காலப் பிரகடனம் அமுலுக்கு வந்த பிறகு மீண்டும் அப்படிப்பட்ட பலகைகள் தைரியமாகத் தோற்றுவிக்கப்பட்டன. அதை எடுக்கவும் முதலில் வேண்டுகோள் விடுப்போம் வேண்டுகோள் மதிக்கப்படாவிட்டால் எங்கள் வேலையை நாங்கள் அறவழியில் செய்வோம்!" என்றார்

அதேபோல இந்திப் பெயர் அழிப்பு வேலையிலும் ஈடுபடுவீர்களா?" என்று பிரச்சினையை ஒருவர் திசை திருப்பினார்

'இந்து' பத்திரிகை நிருபர் இப்படி ஒரு கருத்தையும் சொல்லியிருக்கிறார். இதையும் இணைந்துச் செய்யலாமா என்பது குறித்துத் தலைவர்களுடன் கலந்து பேசுவோம் என்று கூறி அந்தக் கருத்தையும் இணைத்துக் கொண்டார்,

இன்றைய தினம் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்குதலுக்கு ஆளாகி வருவதைக் கண்டித்து அரசின் அலட்சியப் போக்கினால்தான் இந்த விபரீத விளைவுகள் பெரிதாக உருவெடுக்கின்றன. பொறிபாகக் கிளம்பும் போதே அணைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் அது பெருந்தீயாகக் கொழுந்து விட்டு எரியாது!

இந்த சாதி வெறியையெல்லாம் அரசியல் சட்டப்படி ஒழிக்க வேண்டுமென்பது தான் தந்தை பெரியாரின் இலட்சியம்! அதற்காகத்தான் 1973-ம் ஆண்டு அவர் சாதி ஒழிப்பு மாநாடு நடத்தினார்.

"அரசியல் சட்டத்தில் 'தீண்டாமை ஒழிப்பு' என்கிற அந்த வார்த்தையையே மாற்றி சாதி ஒழிப்பு என்று திருத்தம் செய்து தீவிரமாக அதை அமுல்படுத்தினால் இது போன்ற கலவரங்கள் நிகழாமல் இருக்கும். தமிழக முதலமைச்சர் மதுவிலக்கை தீவிரமாக அமுல்படுத்த அவசரச் சட்டம் கொண்டு வரப் போவதாகச் சொல்கிறார். சாதி ஒழிப்புக்கும் அவர் அவசரச் சட்டம் கொண்டு வருவாரானால் நாங்கள் தீவிரமாக அதை வரவேற்று ஆதரிப்போம்" என்றார் வீரமணி.

'தாழ்த்தப்பட்ட மக்களா? அவர்கள் உயர் குடிமக்களான எங்கள் தெருக்களிலே நடமாடக் கூடாது' என திருவாங்கூர் சமஸ்தானத்தில் கேரளத்தில் சொல்லப்பட்டபோது அந்தக் கொடுமையை எதிர்த்து 'வைக்கம்' என்கிற ஊரிலே போராடி—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தந்த வைக்கம் வீரர்' பெரியார் நினைவாக அங்கே ஒரு திருவுருவச் சிலையை அமைக்க வழி அமைத்துத் தருமாறு கேரள மாநில ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் முதல்வர் ஏ. கே. அந்தோணி வைக்கம் நகராட்சித் தலைவர் நாயக் ஆகியோருக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.



நூற்றாண்டு விழாத் திட்டங்களில் ஒரு முக்கியமான திட்டமாக—

அரிஜனங்களை அர்ச்சகராகும் சட்டத்தை அமுல்படுத்தக் கோருவது—அதுபற்றி மக்களுக்கு முறைப்படி விளக்கமளிப்பது — அரசுக்கு முறையீட்டை எடுத்து வைப்பது—முடிவாக தஞ்சை பிரகதீசுவரர் ஆலய கர்ப்பகிருகத்துக்குள்ளே நுழைவது என்கிற திட்டம் திட்டப்பட்டிருக்கிறது!

அதுமட்டுமல்ல: தந்தை பெரியாரின் தத்துவங்களை நாடு முழுமைக்கும் எடுத்துச் சொல்லும் வகையில் தென் கோடிக் குமரி முனையிலிருந்து தமிழகம் முழுவதும் மகத்தான நடைப் பயணம் மேற்கொள்ளப்படும் என்ற அற்புதமான திட்டத்தையும் அறிவித்தார்.

பெரியார் நூற்றாண்டுவிழா எதிர்காலம் பொற்காலமாக பூத்துக் குலுங்கிட விதை தூவும் இலட்சிய ஆண்டாகத் திகழ வேண்டுமென்ற வேட்கையை—திகழும் என்ற நல்ல நம்பிக்கையை நாம் பெறுவதற்கேற்ற முறையில் அமையும் என்ற உறுதியோடு பெரியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட — ஒரு பகுத்தறிவுப் பூமியை படைத்துக் காட்ட— சுயமரியாதைச் சமுதாயத்தை சமைத்துக்காட்ட நம்மை நாம் திருத்திக்கொண்டு—பிறரையும் திருத்தும் அரும் பணியில் ஈடுபடச் சூளுரை ஏற்றுக்கொள்வோம்!

M.K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41. ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

உரிமையாளர் பே. தேவசகாயம்
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி 12. அழகர்கோவில் சாலை, 72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பழனி போலீஸ் நிலையம் வாங்கிய பலி?

—: பழனி சித்தார்த்தன் :—

"அழகான ஒரு இளம் பெண் பொன் நகைகள் அணிந்து, இரவில்—தன்னந் தனியாக ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு—தன்னுடைய உடலுக்கும் உடைமைக்கும் எந்தவித ஆபத்துமின்றி வந்து சேர்கிறாளோ அந்நாள்தான் உண்மையில் விடுதலை நாளாக இருக்க முடியும்."

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் இக்கனவைக் கண்டவர் கலைவாணர் — என். எஸ். கே. ஏறத் தாழ இருபத்தெட்டாண்டுகள் உருண்டோடி விட்டன... ஆனால் அவருடைய கனவு—வெறும் கனவாகவே போய் விட்டது இந்நாடு எதிர் காலத்தில் எப்படி எப்படியெல்லாம் இருக்குமென்று எத்தனையோ தலைவர்கள் கண்ட கனவெல்லாம் கலைந்து மறைந்து காற்றோடு காற்றாகப் போனது போலவே கலைவாணரின் கனவும் கானல் நீராகி விட்டது!

விடுதலை பெற்ற அன்னை இந்தியாவில் இப்போதெல்லாம் 'வேலிகளே பயிர் மேயும்' கதைகள் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன.

பழனி—இரவு பகல் எந்நேரமும் விழித்திருக்கும் நகரம்! பழனிமலை நோக்கிச் செல்லும் சாலையில் பக்தர்கள் ஒரு முடிவே அற்றதுபோல் வந்து போய் கொண்டே இருப்பார்கள். பேருந்து நிலையம் எப்போதுமே 'கலகலப்'பாக இருக்கும்.

அங்கே—அனைத்து மக்களும் பார்த்திருக்க-கீரனூரைச் சேர்ந்த முகமது இபராகிம் என்பவரையும் அவரது துணைவியாரான ஜென்னி உன்னிசாவையும் போலீசார், காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்கிறார்கள்

அங்கே—

ஜென்னி உன்னிசாவிடம் தங்கள் மிருக இச்சையைத் தீர்த்துக் கொள்ள விழைகிறார்கள் 'சட்டம்—ஒழுங்கு—அமைதியைக் காப்பாற்றுகின்ற (!) போலீசார்

அந்நியர் முகம் காண்பது கூட தகாது என்ற கொள்கையில் ஊறிய ஜென்னி உன்னிசா போலீசாரின் கயமைத்தனத்தைக் கணவனிடம் சொல்லி அழுகிறாள்.

ஆத்திரத்துடன் இப்ராகீம் போலீசாரை நோக்கி "இப்படிச் செய்கிறீர்களே... இது தகுமா?" என்று சீறுகிறார்.

உடனே போலீசாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது!

"தங்களுடைய சாம்ராஜ்ய எல்லையான காவல்நிலையத்தில் தங்களை ஒருவன் கேள்வி கேட்பதா?' என்று இறுமாந்திருக்கும் அவர்கள் —தன் மனைவியிடம் தவறாக நடக்கத் துணிந்தது சரியா? முறையா? என்று கேட்ட 'குற்றத்திற்காக' இப்ராகிமை மாறிமாறித் தாக்குகிறார்கள். உயிர் போன இப்ராகிமின் உடலை மலையடிவாரத்தில் கொண்டு போய் வீசிஎறிவிட்டு வருகிறார்கள்—

பிறகு...

அவருக்கும் தங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாதது போலவும், அசந்தர்ப்பமாக அவருடைய உடலைக் கண்டது போலவும் பாவனை செய்து அதை மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்கிறார்கள்—

அவருக்கு ஏற்பட்டது எதேச்சையான மரணம்தான் என்று சான்றிதழ் தரும்படி மருத்துவரிடம் போலீசார் கேட்கிறார்கள்— எப்படியும் ஊரை ஏமாற்றிவிடலாம் என்ற நோக்கத்தோடு!

ஆனால் சந்தேகத்திற்குரிய காயங்கள் இப்ராகீமினுடைய உடலில் இருந்ததால் போலீசார் கேட்டமாதிரி சான்றிதழ் தர மருத்துவர் மறுத்து விடுகிறார்.

இப்ராகீம் போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட கொடுமையான செய்தி காட்டுத்தீ என நகர் முழுக்கப் பரவுகிறது.

ஆத்திரமடைந்த மக்கள் காவல் நிலையத்தின் முன் கூடி கண்டனக் குரல்கள் எழுப்புகிறார்கள்.

...அவர்களை அடக்குவதற்காக' வழக்கமாகச் செய்வது போல் அவர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டு வீசும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிக்குண்டுகளையும் பொழிகிறார்கள் போலீசார் முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைகிறார்கள்..

அமைச்சர் ஒருவர் விரைகிறார்...குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்கிறார்... விசாரணை வைக்கப்படுமாம்...இனிமேல் அதுபோல் நடக்காதாம்... அமைதியாக இருங்கள்... அமைதியாக இருங்கள் என்ற உபதேசம் —வழக்கமான 'கண் துடைப்பு' வேலைகள் இவைகளென்று மக்களுக்குத் தெரியாதா?

காவல் நிலையங்கள் கற்பைச் சூறையாடும் இடங்களாக மாறி எத்தனையோ நாட்களாகி விட்டன... அத்துமீறி அந்நியப் பெண்ணை 'விளையாட'த் துணிந்த எந்த போலீசுக்காவது இதுவரை ஏழு முதல்—பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை கிடைத்திருக்கிறதா?

ஒரு கொலை வழக்கில் தொடர்பு கொண்டிருந்ததாக சந்தேகப்பட்டு' இப்ராகிமை காவல்நிலையத்திற்கு இழுத்துச் சென்றதாக போலீசார்கள் மழுப்புகிறார்கள்.

அது உண்மையாகவே இருந்தாலும் கூட—

சந்தேகத்திற்குரிய ஒருவரை அடித்தே கொன்று விடலாம் என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா?

அப்படியே பார்த்தாலும் — விசாரிக்க வேண்டியது இப்ராகிமைத் தானே...எதற்காக அவரது துணைவியாரையும் போலீசார் இழுத்துச் சென்றார்கள்?

அது மட்டுமல்ல—

மக்கள் கொந்தளிப்பு ஏற்படும் வரையில் கூட அப்பெண்ணை போலீசார் அடைத்தே வைத்திருந்தனர்.

காவல் நிலையத்தில் எத்தனையோ படுகொலைகள் நடந்து விட்டன இனிமேலும் நடப்பதற்கில்லை என்ற நம்பிக்கை எதுவும் கிடையாது. ஆக—

என்ன செய்தால் — எந்த நடவடிக்கை எடுத்தால்— காவலர்கள் தங்கள் காட்டுமிராண்டித்தனமான போக்கை நிறுத்துவார்கள்? என்ற கேள்விக்கான பதில்-, எப்போது, யாரிடமிருந்து கிடைக்கும்?

"நம் நாடு"

பெரியார் நூற்றாண்டு விழா மலர்!

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டியும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், கழகம் பிறந்த நாள் 'நம்நாடு' முதலாண்டு நிறைவு ஆகியவற்றை முன்னிட்டும் மலர்' வெளியிட ஏற்பாடாகியுள்ளது.

மலரின் விலை அடுத்த இதழில் அறிவிக்கப்படும்

"நம்நாடு" விற்பனையாளர்கள் தங்கள் தேவைந்து முன்கூட்டியே தெரிவிக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி

இந்தித் திணிப்பின் விளைவாக...

மத்திய தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சரகத்தின் நேரடியான கட்டளைக்கிணங்க அனைத்திந்திய வானொலியிலும், தொலைக் காட்சியிலும், இந்தி புகுத்தப்படுகிறது.

பரவலாகவும் எளிதாகப் பொருள் புரியக் கூடியதாகவும், இதுவரையில் பயன்படுத்தப் பட்டு வந்த ஆங்கிலச் சொற்கள் அகற்றப் பட்டு அங்கே வளமடையா இந்தி மொழிச் சொற்கள் திணிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக செஷன்ஸ் கோர்ட் (Sessions Court) ஹைகோர்ட் (High Court) 'கமிஷன்' (Commission) — போன்ற ஆங்கில வார்த்தைகள் இப்போதெல்லாம் அனைத்திந்திய வானொலியில் சொல்லப்படுவதில்லை

அமிர்தசரசில் உள்ள தொலைக் காட்சி நிறுவனம், அம்மக்கள் பேசும் பஞ்சாபிச் சொற்களைப் பயன்படுத்தாது அவர்களுக்குப் புரியாத இந்திச் சொற்களையே பயன்படுத்துகின்றது.

இதனால் இந்தியாவில் வாழும் பஞ்சாபி மக்கள் பாகிஸ்தான் வானொலியைக் கேட்கவும் லாகூர் தொலைக்காட்சியைக் காணவும் ஆவல் கொள்கிறார்கள்; இது அவர்களுடைய தவறா?

பதீந்திர சிங்

இல்லஸ்ட்ரேட்டடு வீக்லி ஆஃப் இந்தியாவில் (ஆகஸ்ட் 6) எழுதிய 'Managing Mass Media — Janata Style' என்ற கட்டுரையிலிருந்து

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்



மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் சிலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானால் ரூ. 3 அட்வான்சும். செயினுடன் டாலர் வேண்டுமானால் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினால் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(சிட்டாடல் டாக்கீஸ் சமீபம்)

இந்தி ஆதிக்கத்திற்கு ஓர் எச்சரிக்கை!

எப்பக்கம் வந்து
புகுந்து விடும் — இந்தி
எத்தனை பட்டாளம்
கூட்டி வரும்?
அற்பம் என்போம்
அந்த இந்திதனை — அதன்
ஆதிக்கந் தன்னைப்
புதைத்திடுவோம்.

—புரட்சிக் கவிஞர்.

இந்தி ஆதிக்கத்திற்காக இந்திக்காரர்கள் பத்துப் பிணங்களை ஒரு பாதையில் போடுவார்களேயானால், தமிழர்களுடைய பிணம் நூறு தமிழுக்காக வீழும் என்று நாம் எடுத்துக் காட்ட வேண்டும் அப்படிப்பட்ட உள்ள உறுதி இருந்தாலன்றி இந்த முயற்சியில் வெல்வது என்பது இயலாத காரியம்.

— அண்ணா

தள தள வென்றிருக்கிற வேப்ப மரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப் பல் துலக்கினால் அந்தக் குச்சி தன் மணக் கசப்பைக் காட்டிக் கொள்கிறது தமிழ் மொழியின் எதிர்காலம் திட்டமிட்டு ஒடிக்கப்படுகிறது. தமிழர்கள் கசப்பைக் காட்டிக் கொள்ளக் கூட உரிமை இல்லையாம் வேம்பினும் தாழ்ந்தவனா தமிழன்?

—கலைஞர்

புற்று நோயைப் போல மீண்டும் முற்றுகை இடத் தொடங்கி விட்டது இந்தி. உடலில் எந்த இடத்தைப் புற்று நோய் தாக்கும் என்பது எவர்க்குமே தெரியாததல்லவா? அதைப் போலவே இந்தி எங்கே எப்பொழுது எவ்வடிவில் நுழைகிறது என்பதையும் நம்மால் புரிந்திட முடியவில்லை. ஆனால் எப்படியோ நுழைந்து விடுகிறது அல்ல அல்ல, நுழைக்கப்பட்டு விடுகிறது புறநானூறு கலிங்கத்துப் பரணி ஆகிய வீரத்தமிழ் நூல்கள் பிறந்துள்ள தமிழகத்தில் நாமும் பிறந்துள்ளோம் என்பதே பெருமை அந்நூல்களை வரலாற்றுப் பாதையிலிருந்து அகற்ற நினைக்கும் ஆதிக்க சக்திகளை அப்புறப்படுத்துவதே அதைவிடப் பெருமை இந்தி யெனும் செந்தீயின் ஆதிக்கத்தை முளையிலே கிள்ளி யெறிதல் வேண்டும் இல்லையேல் ஆலாய்ப்படர்ந்து விடும் அந்த நச்சு மரம் அரசாய்த் தளிர்ப்பதுடன் தானும் இடத்திலெல்லாம்; விதை தைபைத் தெளிக்கும்; வீணரை வளர்க்கும்!

பெரும்பான்மைபோர் பேசும் மொழிக்கே நாட்டின் தேசிய மொழியாகும் தகுதி இருக்கிறதாம். பெரும்பான்மை, பெரும்பான்மை என்று நாளுக்கு நாள் பிதற்றுகிறார்களே அந்தப் பெரும்

இராசை குமார்

பான்மை பார்ப்பதற்கும் ஒரு நேரம் இருக்கிறது விதி இருக்கிறது. வரம்பு இருக்கிறது மொழிப் பிரச்சினையில் பெரும்பான்மை பார்ப்பது அறிவுடைமையாகாது.

'உங்களுக்குத் தேவை இந்தியாவின் ஒருமைப்பாடா? அல்லது செந்தமிழின் உரிமைப்பாடா?'' எனும் வினா எழுப்பினால் அச்சமின்றிச் சொல்வோம் — அதுவும் ஆணைமையுடன் சொல்வோம் தமிழைத் தாழ்வு செயும் இந்தியா எங்களுக்குத் தேவையேயில்லை. எங்கள் உயிர் வாழ்வு இன்பம், எதிர் காலம் அனைத்துமே எங்கள் மொழிதான், தமிழர்கள் உயிரின கலப்பாகவும், உதிர நாளங்களில் சுழற்சியாகவும், உள்ளத்தில் உணர்வாகவும், விழிகளில் ஒளியாக திகழும் அவர் தம் மொழியை இரண்டாம் நிலைக்குத் தள்ளிட எண்ணும் தேசியவாதிகளுடன் சேர்ந்து இந்திய ஒருமைப்பாடு எனும் வறட்டுக் குரல் எழுப்பத் தமிழர்கள் தயாராயில்லை.

'இந்தித் திணிப்பு இல்லை' என்று கூறிய பின்பே தமிழகத்துள் நாடாளு மன்றத் தேர்தல் போது சனதா கட்சியினரால் நுழைய முடிந்தது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் போலும்! எப்படி நினைவிருக்கும்? சர்க்காரியா ஆணைக்குழு ஓர் அரசியல் வஞ்சினம் என்று முன்பு பேசியதை மறந்தவர்களன்றோ அவர்கள்? கலைஞர் மீது சுமத்தப்பட்ட வழக்குகட்கும், குற்றச் சாட்டுகட்கும் ஆதாரமே இல்லை அவை அனைத்துக்கும் காரணம் அரசியல் பின்னணி என்று முழங்கியதை விழுங்கியவர்களன்றோ அவர்கள்

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின் தமிழர்களின் விழிப்புணர்ச்சியை வழி நடத்திச் செல்லத் தக்க தலைவர் எவருமிலர் என்று எண்ணியிருந்தால் அந்த எண்ணத்தை இந்தித் திணிப்பாளர்கள் விட்டொழிக்க வேண்டும் தமிழர்கள் உயிரில் உயிராயும் உணர்வில் உணர்வாயும் ஒன்றிய எழுச்சித் தலைவர் கலைஞர் ஒருவர் இருக்கிறார்!

இந்தித் திணிப்பை எதிர்த்து ஆசைத்தம்பி அலைகடலாய் ஆர்த்தெழுகிறார். கோபால்சாமி குமுறுகிறார் பாலா பழனூர் கூடப் பாய்கிறார் ஏன்? தமிழகக் காங்கிரசார்கூட ஆவேச மடைகிறார்கள். இத்துணை எதிர்ப்புக்கிடையிலும் இந்தி மொழியைத் திணிக்கிறார்கள் என்றால் அதன் காரணம் தான் என்ன? ஆளும் கட்சி என்னும் தகாத ஆணவமா? அல்லது தாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்னும் தவறான அலட்சியமா? அல்லது நம் ஆட்சி நிலைக்காது. அதற்குள் நம் மொழியைப் பரப்பிடல் வேண்டும் என்ற தலை போகும் அவசரமா? காரணம் யாதாக இருப்பினும் அவர்கள் ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழகம் இந்தியை ஒரு போதும் ஏற்காது, ஏற்கவே ஏற்காது

உருவாக்கியவரே உதறித் தள்ளுகிறார்

'மொரார்ஜி தேசாயையும், சரண் சிங்கையும் ஆட்சி பீடத்தில் ஏற்றியது நான் செய்த முட்டாள்தனம். இவர்கள் இருவருமே கையாலாகாதவர்கள்''

—இவ்வாறு ஜனதா தலைவர்களைச் சாடுவது யாரென்று நினைக்கிறீர்கள்? முரண்பாடான கருத்துக்களைக் கொண்டவர்களையும், 'அதிபுத்திசாலி' என்று தங்களை நினைத்துக் கொண்டிருக்கும் இராஜ் நாராயணன் போன்ற பல மாறுபட்ட கட்சித் தலைவர்களையும், ஓரணிக்குக் கொண்டு வந்து ஜனதா என்ற 'அவியல்' கட்சி உருவாகக் காரணமாக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன்தான் இவ்வாறு சாடுகிறார்.

ஆரம்பத்தில் 'ஜனதாவின் மூளை' எனப் புகழ்ந்துரைக்கப்பட்ட அதே ஜெ. பி. தான் இன்று இவ்வளவு கடுமையாக ஜனதா தலைவர்களைத் தாக்குகிறார் இந்த நிலைக்கு அவரை மாற்றியவர்கள் யார்? சொல்லாமலே விளங்கும்.

என்னே காலத்தின் கோலம்!

விற்பனையாளர் நியமனம்

திருச்சி—12 எடமலைப்பட்டிபுதூர் பகுதிக்கு தோழர் எம். செல்லப்பிள்ளை என்பவர் விற்பனையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எனவே கழகத் தோழர்கள் அவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிர்வாகி,
'நம்நாடு'.

பழமையை எருவாக்கிப் புதுமைப் பயிர் வளர்ப்பதே நமது பணி!

(கலைஞர் பேச்சு முதற்பக்கத் தொடர்ச்சி)

லாறும், இலக்கியங்களும் காப்பாற்றப்பட வேண்டுமென்பது பற்றி அண்ணா அவர்கள் ஆற்றிய உரை வழி நடக்கிறோம்.

ஆகவே புதிய சிந்தனைகள், எண்ணங்கள், ஏற்பாடுகள், முன்னேற்றங்கள் — இவைகளை உண்மையில் தடுப்பவர்கள் யார் என்பதையும், அதே நேரத்தில் அவைகளை நாட்டில்வளர்க்கவேண்டுமென்று கருதுகிறவர்கள் யார் என்பதையும் தமிழ் நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். புதுமை என்ற பெயரால் பழமைகள் அனைத்தையும் அழித்துவிட முடியாது புதுமை என்ற பெயரால் அந்தக் கட்டுரையை எழுதிய நண்பரோ, அதை வெளியிட்ட நண்பரோ பழமையை அசைபோடக் கூடாது என்பதற்காகத் தங்கள் வீட்டில் இருக்கும் பாட்டனார் படத்தை, முப்பாட்டனார் படத்தை எடுத்துத் தெருவில் எறிந்துவிட்டார்களா? இனிமேல் பிறக்கப் போகிற பிள்ளைகள் பிறந்திருக்கிற பிள்ளைகள் புகைப்படங்களைமாத்திரம்தான் மாட்டி வைப்போம் என்று கூறுவார்களா? பழமையை அறவே ஒதுக்கிவிட வேண்டுமென்பதோ, அல்லது அதனை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதோ நமது, கருத்தல்ல; அண்ணா ஒரு முறை கூறியதுபோல, பழமையை எருவாக்கிக் கொண்டு புதுமைப் பயிர் வளர்ப்பதே நமது கொள்கை; வரலாற்றை மறந்த இனம், மதிக்க மறுத்த இனம் வாழ்ந்ததாக ஒரு வரலாறு இல்லை!

புனித ராஜ்யம்

[ஊர்ப் பொது மண்டபம், இரவு நேரம். தெரு விளக்கின் உதவியால் வெளிச்சம்மண்டபத்திற்கு வெளியேயும் உள்ளேயும் ஓரளவு பரவியிருக்கிறது. மண்டபத்துத் தூண் ஒன்றில் சாய்ந்தவாறு சொக்கி, விம்மி விம்மி அழுது கொண்டிருக்கிறாள். அப்போது நொண்டியும் பொடியனும் குடிபோதையுடன் கலகலவெனச் சிரித்துக் கொண்டு வருகிறார்கள். அது கண்ட சொக்கி, அஞ்சி நடுங்கி மண்டபத்துத் தூண் மறைவில் ஒளிந்து கொள்கிறாள்.]

நொண்டி : பொடியா!.... ஹ ஹ ஹ! எப்படி நம்ப வேலை—நல்லான்கதையை ஒரு வழியா முடிச்சாச்சு! நம்பளும் நல்லவனா ஆகியாச்சு... ஆமாம்... அண்ணாச்சி எங்கே ஆளைக் காணோம்....

பொடியன்: அண்ணாச்சியா? அவரு- எஸ்.பி.யைச் சரி கட்டப் போனாரே..,. அந்த வேலையா அலைஞ்சுகிட்டிருப்பாரு!...

நொண்டி : புனிதமான ஒரு தொழிலை நடத்துகிறோம் நம்மகிட்டே அந்த நல்லான் புலி மாதிரி பாஞ்சான் பார்த்தியா?

பொடியன் : புலிகளை எலிகளாக்குவோம்- எலிகளை எறும்புகளாக்குவோம்! எறும்புகளை...ஈக்களாக்குவோம்... அப்படிப்பட்ட அதிகாரம் படைத்தவர்கள் நாம் என்பதைகூரை மீது நின்று கொண்டு கூவுவோம்!

நொண்டி : அப்படிச்சொல்லு. நம்பளை எதிர்த்து சவால் விட்டாரு ஒருத்தரு!... சேலை கட்டிக்குவேன்னாரு; அவரே இப்ப வந்து காலில் விழுந்து கிடக்கிறாரு!

பொடியன் : யாரு அவரு...? இன்னமும் வேட்டிதான் கட்டியிருக்காரா?

நொண்டி : தொலையட்டும்னு 'பர்மிஷன்' கொடுத்துட்டேன்! இல்லேன்னா பாவாடை கட்டி... அனுப்பியிருப்பேன்...

பொடியன் : நம்மகிட்டே மோதுனவுங்க... மூஞ்சி முகரக் கட்டையெல்லாம் கரிபூசிகிட்டு... நம்ப காலிலேயே விழுந்து சாமீ! சரணம் அய்யப்பா'ன்னு பூஜை பண்றாங்களே; அதுவல்லவா பெரிய விசேஷம்!

நொண்டி: அவுங்களுக்குன்னு ஒரு கொள்கையில்லாதவுங்க... வாழுற வீட்டுக்கு மாரடிக்கிறவுங்க... இக்கரைக்கு அக்கரை பச்சைன்னுதாண்டுறவுங்க அப்படிப்பட்ட ஆளுங்

★★★★★★!★★★★!★★★

காட்சி-6

★★★★!★★★★!★★★★★

களுக்கு நமக்கு இருக்கிற 'ஸ்டடினஸ்' கூட இருக்காது தெரியுமா?

பொடியன் ; நம்ப, எவ்வளவோ 'ஸ்டடியா' இருக்கிறோமே! ஆளுக்கு மூணு பாட்டிலும் அடிச்சுட்டு... ஆடாம... அசையாம.... அப்படியே நிற்கிறோமே. (இருவரும் தடுமாறுகிறார்கள்)

நொண்டி : குறுக்கே பேசாதே... நான் நமக்கு கிடைக்கிற வெற்றிகளை நினைச்சு பூரிச்சுப் போய்க்கிட்டு இருக்கேன். பொடியா! ஒண்ணு கவனிச்சியா?.., இந்த ஊர்ல நம்பளை ஓவரா திட்டினவங்க எல்லாம் இன்னிக்கு நம்ப ஆட்டி வைக்கிற குரங்கு மாதிரி ஆடுறாங்க'- நேற்று ஒருத்தன் என்னை வாயில வந்தபடி பேசினான்..... கேள்விப் பட்டேன்.... இன்னைக்கு என் வாசல்ல வந்து நிக்கும்படியா பண்ணிட்டேன்... இது எல்லாம் யார் பண்ற வேலை... யார் பண்ற வேலை?

பொடியன்: நீங்கபண்றவேலை

நொண்டி சே... நான் என்ன சாதாரண மனுஷ ஜென்மம்... என்னால என்ன முடியும்? கடவுளை விட சக்தி வாய்ந்தது... காசுடா; காசு! அந்தக் காசு பண்ற வேலை. புனித ராஜ்யத்திலே நான் ஒரு முக்கியமான புள்ளி... நான் விரல் அசைத்தால் வேங்கை மாதிரி சீறுகிறவுங்க எல்லாம் வெள்ளாடு மாதிரி அடங்கணும்; தெரியுமா... அதிகாரம், பணம், பதவி... அந்தஸ்து... இப்படிப் பட்ட எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்படாத இரும்பு நெஞ்சம் படைச்சவுங்க யாருடா இருக்கா உலகத்திலே...?

[அப்போது "நான் இருக்கிறேன்" என்று ஒரு குரல் கேட்கிறது! ஆண்குரல்தான் அது!

நொண்டியும், பொடியனும் திடுக்கிட்டு மண்டபத்துக்குள் ஓடிப்போய் சுற்றும் முற்றும் பார்க்கிறார்கள். அங்கே ஒளிந்திருந்த சொக்கியை நொண்டி- இழுத்துக் கொண்டு வெளியே வருகிறான்.]

நொண்டி : ஓகோ! நீதான் ஒளிந்து கொண்டு அசரீரி போலப் பேசி, ஆளைப் பயமுறுத்துறியா? இதிலவேற ஆண் குரல் மாதிரி மாத்திக் கத்துறியா?

கலைஞர் கருணாநிதி

பொடியன்: 'பலகுரலரசி'னுன் பட்டம் கொடுக்க வேண்டியது தான்.

சொக்கி; நான் கத்தவுமில்லை சத்தம் போடவுமில்லை... என்னை விட்டு விடுங்கள்

நொண்டி : கோப்பையிலே இருக்கிற சாராயத்தை எந்த முட்டாளாவது கீழே ஊத்துவானா?என்ன பொடியா? இவளைவிட முடியுமா?

பொடியன் ஆமாங்க மளமளன்னு சாப்பிட்டு ஏப்பம் விடவேண்டியது தான்..

நொண்டி : அதிருக்கட்டும் சொக்கி... அதிகாரம், அஸ்தஸ்து, பணம்,பதவி இவைகளுக்கு ஆசைப் படாதது யாருன்னு நான் கேட்டபோது நானிருக்கேன்னு சொன்னியே; உனக்கு அதிகாரம் வேண்டாமா? என்னையே நீ அதிகாரம் செலுத்தலாம், நீ இஷ்டப்பட்டால்! அந்தஸ்துஉனக்கு அடிமையாகும் நீ மட்டும் சரிஎன்றுசொன்னால்; பணம்... பதவி... இரண்டும் உனக்குப் பராக்குக் கூறும்... உன் பார்வையை மட்டும் என் மீது வீசினால்... என்ன சொல்கிறாய்?...

(அவளைத் தொட்டிழுக்கிறான்)

குரல்: தொடாதே அவளை!

நொண்டி : (விழிப்புடன்) என்னடா இது...? இது வேறு யார் குரலோதான் பொடியா!

பொடியன் : என் குரல் இல்லீங்க!...

நொண்டி : எங்கே சொல்லுடா 'தொடாதே அவளை'ன்னுசொல்லுடா!

பொடியன் : தொடாதே அவளை!

நொண்டி ; சே! சே! உன் குரலும் இல்லை .(கனைத்துக் கொண்டே) யார் கத்துவது? இந்த வீரனிடமா வேடிக்கை காட்டுறே? என் பக்கத்திலே ஒரு பெண் நிற்கும்போது நான் கோழையாக இருக்கமாட்டேன் என்பதை புரிந்து கொள்... தைரியமிருந்தால் நேருக்கு நேர் வா!.....

[நொண்டி சுற்றும் முற்றும் பார்த்துக் குரல் கொடுத்ததும்- எஸ். பி. எதிரே வருகிறார். கம்பீரமாக நடந்தவாறு! அவர். போலீஸ் உடையில் இல்லை. கைகளைப்பின்புறமாகக் கட்டிக்கொண்டு வீரநடை போட்டுவரும் அந்த வலிபரைக் கண்டதும்நொண்டியும்பொடியனும்வியப்படைந்துநிற்கிறார்கள்!]

நொண்டி : நீ யார்? ஒரு பெண் தனியாக இருக்குமிடத்தில் வந்து தகராறு செய்கிறாய்...

எஸ்.பி. : ஆகாகா... பெண்கள் குலத்துப் பாது காவலரே! ஒரு பெண் தனியாக இருக்கும்போது தகாத முறையில் நடந்து கொள்வது நீங்களா?

(4-ம் பக்கம் பார்க்க)

[இந்தக் கவிதையை எழுதி, வெளியிட்ட குற்றத்திற்காக'—அன்று இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பாபுராம் ஹரிக்கு இருபத்தோராண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து அவரை அந்தமான் சிறையில் அடைத்தது]

இறைவனும் விடுபடும் நாள்!

—பாபுராம் ஹரி

ஈன்றெடுத்த தாயினுமினிய—என்
இந்தியத் திருநாடே!
அந்நியர் விலங்கொடிக்கும்
நாளொன்றும் வெகுதூரமில்லை.
இன்னுமேன் கண்ணீரை—நீ
சிந்துகின்றாய் பொன்னாடே?
கருத்த மேகமெனக் கவிந்திருக்கும்
பெருத்த அவமானமும்
துயரார்ந்த நின் 'தலைவிதி'யும்
நீடித்திருக்காது நெடுநாளே!
விடுதலையெனும் பெருங்காற்று
எங்கெங்கும் வீசக்கண்டு
முன்னாளில் வந்தேறிகள்
இந்நாளில் அகலுவர்;
இளமை துளிர்த்திருக்கும் தளிர்களும்
முதுமை பழுத்திருக்கும் சருகுகளும்
விடுதலையெனும் வேள்வித் தீயில்
விழுந்து கருகச் சித்தமாயின:
இந்தியா விலங்கொடிக்கும் நாளே
இறைவனும் விடுபடும் நாளாகும்!

ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம்:
—ஜாகீர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை.600018 தொலைபேசி 441009